புதுக்கோட்டை ஸமஸ்தான

தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1944-ம் ஞு அக்டோபர் மீ 28உ [ந. 221

தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

யுத்தத்துக்குப்பின் உலக சீர்திருத்தம்.

—22-ம் பக்கம் பார்க்க.

பிலிப்பைன்ஸுக்கடுத்த கடலில் மகத்தான கடற்போர்;
ஜப்பானியக் கடற்படைக்குப் படுதோல்வி.
இரண்டு விமானந் தாங்கிக்கப்பல்களும், ஒரு போர்க்கப்பலும் உள்பட 9 கப்பல்கள் நிச்சயமாக மூழ்கடிக்கப்பட்டன.
மற்றும் 20 கப்பல்கள் பழுதுபடுத்தப்பட்டன.

பிரஸங்கம் CCXXI.

சரி—போய்வாருங்கள்.

(வெர்னன் பார்ட்லெட், நியூஸ் க்ரானிகிள்).

(இந்தக் கட்டுரையில் நெருக்கடியான சமயத்தில் பிரிட்டனுக்கு வந்தவர்களைப்பற்றியும், அவர்களுக்கு தங்களுடைய தேசம் விடுதலைபெறும் என்ற நம்பியிருந்ததென்பதைப்பற்றியும் வெர்னன் பார்ட்லட் எழுதுகிறார்.)

நான்கு வருடங்களாக அயல் நாடுகளில் வசித்துவிட்டு நீங்கள் தாய்நாட்டிற்குச் செல்லப்போகிறீர்கள்.

நீங்கள் இங்கு வந்தபொழுது உங்களிடம் ஒரு ஆடையும் ஒரு சில நாணயங்களுமிருந்தன வென்று உங்களுக்கு ஞாபகம் வருகிறதா.

உங்களின் ஒருவரான மாஜி நிர்வாக மந்திரி என்னிடம் ஐந்து பவுன்கள் கடன் கேட்டு நான் நிலைமையை அறிந்துகொள்ள முடியாமல் அரை மனதுடன் அதைக் கொடுக்கவில்லையா.

மற்றொரு ஸ்தானிகரிடம் ஜெர்மனி ப்ருஸ்ஸல்ஸுக்குள் நுழையுமுன் நீங்கள் எடுத்து வந்த சிலபொருள்களையும், மோதிரத்தையும் அடகுவைத்துப் பொருள் சம்பாதிக்கலாமே என்று கூடச்சொன்னேன்.

நீங்கள் அனேககாலம் பிரயாணம் செய்தபின் இங்கிலாந்துக்கு வந்தீர்கள். வீரர்கள் என்று வரவேற்கப்படவேண்டுமென்று நீங்கள் விரும்பினீர்கள். என்ன கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருந்தாலும் நீங்கள் ஹிட்லரிடம் சரணடைவதில்லை என்ற தீர்மானத்துடனிருந்தீர்கள். உங்களுக்கு குழப்பமும் சங்கடமும் ஏற்பட்டது. உங்களுடைய குடும்பத்தாரின் சங்கதியைப்பற்றிக் கவலை கொண்டீர்கள். காலக்கிரமத்தில் உங்களுக்கு அமைதி ஏற்பட்டது. உங்களுடைய நிர்வாகமும், ஆபீஸ்களும் இங்கு அமைக்கப்பட்டன. உங்களுடைய பத்திரிகைகள் பிரசுரமாகின. படைகளைத் திரட்டினீர்கள். பொருளைச் சேமிக்க ஏற்பாடு செய்தீர்கள்.

எங்கள் நாட்டில் வசித்து மின்னல் தாக்குதல், விளக்கவிப்பு முதலிய கஷ்டங்களையும் அனுபவித்தீர்கள். நீங்கள் சாதாரண மனிதர்களைப்போல் வாழ்ந்து வந்தீர்கள்.

எங்களைவிட உங்களுக்கு அதிகக் கவலைகள் ஏற்பட்டிருந்தன. இதற்குமுன் பணப் பெருக்கினால் அயல் நாடுகளுக்கு சுற்றுப்பிரயாணம் செய்தவர்கள் தேசபிரஷ்டமடைந்து செல்ல சம்மதித்துவிட்டீர்கள்.

உங்கள் நாட்டின் விடுதலைக்குப் போர்புரிய பிரியப்பட்டீர்கள். அதற்குப் பதிலாக நீங்கள் பழைய ஸார்ஜண்ட் மேஜர்களிடம் தினசரி கவாத்து செய்ய வேண்டியதாயிற்று.

இந்தக் காலத்தில் எங்களுக்கும், உங்களுடைய தாய்நாட்டிற்கும் மிகுந்த தொடர்பு மறைந்து வந்தது. எதிர்ப்புப் படைகளைச் சேர்ந்தவர்கள் ரகசியமாக இந்நாட்டிற்கு வந்து உங்களுக்குத் தகவல்களை அறிவித்தார்கள். அவர்களின் பசிப்பிணி, ஜெர்மனியிடம் வெறுப்பு, ஜெர்மன் ரகசியப் போலீஸிடம் அவர்களுக்குள்ள பீதியை வர்ணிக்கமுடியாது.

உங்கள் சொந்த நாட்டில் ஜெர்மானியர்களுக்கு எதிர்ப்பு வலுப்பட்டுவரும்பொழுது அடிமைத்தனத்துக்கு உட்படாமல் அயல்நாட்டு வாசத்தை நீங்கள் விரும்பிய மனப்பான்மை முக்கியத்வம் பெற்றது. உங்களுடைய மனப்பான்மைதான் எதிர்ப்பு இயக்கத்துக்கு அடிப்படை என்பதை எல்லோரும் மறந்து விட்டீர்கள்.

அந்தக்காலம் போய்விட்டது. நீங்கள் ஊருக்குத் திரும்ப ஆயத்தம் செய்து வருகிறீர்கள். சிலசமயங்களில் உங்கள்பேரில் ஜெர்மனி வெடிகுண்டுகளைப் போட்டிருக்கிறது. சில சமயங்களில் நேசதேசத்தார்கள் உங்கள் குடும்பங்கள் பேரில் வெடிகுண்டுகளைப் போட்டிருக்கிறார்கள். உங்களுடைய குழந்தைகளை ஜெர்மனிக்குக் கொண்டுபோயிருப்பார்கள் அல்லது டாட் சங்கத்தார் அவர்களைக் கோட்டைகளைக்கட்ட உபயோகித்திருப்பார்கள்.

உங்களுடைய பிரதம மந்திரிகள் மிஸ்டர் ஈடனிடம் விடைபெற்றுக்கொண்டுவிட்டார்கள். அவர்கள் பத்திரிகை ஆசிரியர்களுடன் கடைசியாகப் பேசிவிட்டார்கள். அயல் நாட்டு வாசம் முடிந்துவிட்டதென்ற ஆனந்தம் அவர்களுக்கு ஏற்பட்டாலும், அவர்களுக்கு அநேகப் பிரச்னைகள் நிற்கின்றனவென்பதை அவர்கள் அறியவேண்டும். யுத்தத்தில் நமக்கு முன் ஒரு படிப்பினை கிடைத்திருக்கிறது. அநேக வருடங்கள் வரையில் அமைதிக் குறைவும், குழப்பமும், கவலையும் மிகுதியாக இருக்குமென்று நாம் அறிந்துவிட்டோம்.

ஆகிலும் நான்கு வருடங்களாக ஏற்பட்ட கூட்டுறவு வாழ்வு வியர்த்தமாகப் போய்விடாது. ஐரோப்பாவில் கீழறுப்பான் வேலையில் ஈடுபட்ட சேனைகளுடன் தொடர்புள்ள எவரும் அவர்களுக்கு நாட்டின் எதிர்கால வாழ்க்கையில் அக்கரையிருக்கிறதென்று நன்கு அறியக்கூடும்.

லண்டன்மாநகரமும்,பிரிடனின் தலைநகரமும் பிரிடிஷ் சாம்ராஜ்ய நாடுகளின் தாய்நகரம் என்பது மட்டுமல்ல. நான்கு வருடங்களாக அதில் ஆறு ஐரோப்பிய நிர்வாகங்கள் நிலைபெற்றிருந்தன. எங்களுடைய நிர்வாகமும் நடைபெற்றது. உங்களுடைய மந்திரிகளும் பொதுப்படையான பிரச்னைகளை விவாதித்திருக்கிறார்கள். நீங்கள் ஒருவரை மற்றவரும் எங்களையும் நன்கு அறிந்துவிட்டீர்கள்.

மற்ற தேசங்கள் மறைந்துவிட்டபொழுது நாங்கள் மட்டும் பிழைத்திருப்பதற்கு மூலாதாரமாக எங்களிடம் தாராள மனப்பான்மை இருக்கிறது. நமது சந்ததியார்களுக்கு வறுமையின்மையும் பீதியின்மையும் ஏற்படக்கூடிய ஒரு திட்டத்தை நிறுவுவதில் நாமும் ஒரு பொறுப்பெடுத்துக்கொள்வோம். நீங்கள் போய்வாருங்கள். உங்களுக்கு அதிர்ஷ்டமுண்டாகட்டும்.

வார யுத்தச் செய்திகள்.

(A)-முக்கியமான சம்பவங்கள்.

15—10—44 (ஞாயிற்றுக்கிழமை).	ருஷ்யர்கள் வடக்கு பின்லாந்திலுள்ள பெட்ஸாமோவை ஆக்கிரமித்தார்கள். ஹங்கேரியின் ரீஜண்டான அட்மிரல் ஹார்த்தி நேசதேசத்தாரிடம் சமாதான ஷரத்துக்களைக் கோரினான். பாஸிஸ்டு கட்சி அவனைத் துரத்திவிட்டது. நேசதேசப் படைகள் லெம்னாஸில் இறங்கிவிட்டன.
16—10—44 (திங்கட்கிழமை).	மாஸ் நதியைத் தாக்கும் வலிமை அதிகரித்துவிட்டது.
17—10—44 (செவ்வாய்க்கிழமை).	செம்படை செகோஸ்லாவேகியாவுக்குள் புகுந்தது. ஹிட்லர் ஜெர்மனியில் உள்நாட்டு ரக்ஷகப்படையைத் தயாரிக்கிறான். பிரிடிஷ் படைகள் ஹாலந்திலுள்ள வென்ரேஜை ஆக்கிரமித்தன.
18—10—44 (புதன்கிழமை).	14-வது இந்திய சேனை பர்மாவிலுள்ள டிட்டிமை விடுவித்தது. நேசதேசப்படைகள் டோடிகானிஸிலுள்ள ஸ்கார்பாண்டோவை ஆக்கிரமித்தன. ருஷ்யர்கள் கிழக்கு பிரஷ்யாவில் தாக்குதலைத் துவக்கினார்கள்.
19—10—44 (வியாழக்கிழமை).	அமெரிக்கர்கள் பிலிப்பைன்ஸில் லெடித் தீவிலிறங்கினார்கள். பிரிடிஷ் படைகள் இதாலியில் செசனாவை ஆக்கிரமித்தன.
20—10—44 (வெள்ளிக்கிழமை).	நேசதேசப்படைகள் ஜெர்மனியில் ஆக்கனை ஆக்கிரமித்தன. ருஷ்யர்கள் ஹங்கேரியில் டெப்ரக்ஸானைப் பிடித்தன. அமெரிக்கர்கள் லேடித் தீவின் தலைநகரமான டாக்ளோபானை ஆக்கிரமித்தன.
21—10—44 (சனிக்கிழமை).	கனடியர்கள் இதாலியில் செசனாடிகோவைப்பிடித்தார்கள். நேசதேசப் படைகள் பர்மாவில் ஹாகாவைப் பிடித்தார்கள்.
22—10—44 (ஞாயிற்றுக்கிழமை).	ருஷ்யப்படைகள் கிழக்கு பிரஷ்யாவில் 20 மைல்கள் முன்னேறிவிட்டன. 8-ம் படை இதாலியில் சேவியோவை அடைந்தது. கனடியர்கள் ஷெல்ட் நதி முகத்துவாரத்திலுள்ள பிரெஸ்சென்ஸைப் பிடித்தார்கள்.
23—10—44 (திங்கட்கிழமை).	நேசதேசத்தார்கள் பிரான்ஸில் டில்கர் நிர்வாகத்தை ஒப்புக்கொண்டார்கள். அமெரிக்கர்கள் லேடிக்கு சமீபத்திலுள்ள மூன்று தீவுகளைப் பிடித்தார்கள். நேசதேசப் படைகள் ஷெர்டோக்னென்பொஷை ஆக்கிரமித்தன.

(B)-செய்திச் சுருக்கம்.

மேற்குப்போர்முனை.

(1) **ஆண்ட்வெர்ப்புக்கு வடக்கு.**—நேசதேசப்படைகள் ரூசெண்டால் கால்வாயைத் தாண்டிவிட்டார்கள்.

(2) **ஷெல்ட் நதிப்பகுதி.**—இசண்டிக், ஆர்டன்பர்க், மிடில்பர்க், பிரெஸ்ஸன், எஸ்ஸகென் விடுவிக்கப்பட்டன. நேசதேசப்படைகள் பிரெடரிக் கோட்டைக்குள் நுழைந்துவிட்டன.

(3) **வென்ரேஜ்.**—மான் நதியின் மேற்குக்கரையிலும், ஜெர்மன் எல்லையிலிருந்து 8 மைல்கள் தூரத்திலுமுள்ள வென்ரேஜ் பிடிபட்டது. வென்ரேஜிலிருந்து ரேன் வரையிலுள்ள

ரஸ்தா வழியாக முன்னேறி நேசதேசப்படைகள் நதியின் எதிர்த்த கரையிலுள்ள வென்லூயை அணுகிவிட்டார்கள்.

(4) **புதிய தாக்குதல்.**—ஹாலந்தில் எஸ்ஹெர்டோகன்பாஷ் என்ற ரஸ்தா நிலயம் அக்டோபர் 23-24ம் தேதியன்று பலமாகத் தாக்கப்பட்டது. அந்நகரின் தெருக்களில் கடும் போர் நடைபெறுகிறது. அதற்கு சமீபத்தில் ஆறு இடங்கள் பிடிபட்டன. ஹிக்கண்டல், ஆலந்து, ப்ருகன், மிட்டல்ரோட், பெஸ்ட், ரோன்மாலன்.

(5) **ஆகென்.**—அக்டோபர் 20-ம் தேதியன்று ஆகென் பூராவும் ஆக்கிரமிக்கப்பட்டது. ஆகெனுக்கு வடக்கிலுள்ள வர்ஸ்லென் தாக்கப்படுகிறது. ரிக்டெரிக்கும் கோகல்ஷிடும் பிடிபட்டன.

(6) **வாஸ்கஸ் பிராந்தியம்.**—ப்ருயர்ஸ் விழுந்துவிட்டது.

கிழக்குப் போர்முனை.—

(1) **ஆர்க்டிக்.**—பெட்ஸாமோவைக் கைப்பற்றிய ருஷ்யப்படை நார்விஜியன் எல்லையை அடைந்துவிட்டது.

(2) ருஷ்யர்கள் ரீகா வளைகுடாவிலுள்ள ஒஸல் தீவிலுள்ள ஸ்வோர்பி தீபகற்பத்தில் இறங்கிவிட்டார்கள்.

(3) ரீகாவுக்கு மேற்கில் ஷ்லோக் ஆக்கிரமிக்கப்பட்டது.

(4) டான்ஸிக்கை நோக்கி ருஷ்யர்கள் புதிய தாக்குதலைத் துவக்கிவிட்டார்கள்.

(5) கிழக்கு பிரஷ்யாவில் இன்ஸ்டர்பர்க்குக்கு கிழக்கில் 50 மைல் தூரத்தில் வில்கோவிஸ்கனுக்கு இருபக்கத்திலும் 25 மைல்கள் கொண்ட போர்முனையில் ருஷ்யப்படை ஜெர்மனியின் கிழக்கு பிரஷ்ய அரணுக்குள் புகுந்துவிட்டது. இந்தத் தாக்குதலில் செம்படை கிழக்கு பிரஷ்யாவில் கோனிக்ஸ்பர்க்குக்குப்போகும் வழியில் 20 மைல்கள் முன்னேறியிருக்கிறது. அது டில்ஸிட்டையும், கோல்டாப்பையும் அடைந்துவிட்டது.

பால்கனில் கீழ்கண்ட இடங்கள் பிடிபட்டன.

(6) **யூகோஸ்லாவியா.**—தலைநகரமான பெல்கிரேட், சாம்பார், செம்லின், கிராகுஜெவாக், யாகொடின.

(7) **ஹங்கேரி.**—டெப்ரகான், பாஜா, நிரகாசா, ஆசென்ஸா, செமன்ஸ்கோபோல், யாங்கோக்ஸ்.

(8) **செகோஸ்லாவேகியா.**—மூகாசெவோ.

(9) **வடக்கு டிரான்ஸில்வேனியா.**—வில்லிடெட்மாரியூ.

(10) **கிரீஸ்.**—கிரீஸின் பாதிபாகம் விடுவிக்கப்பட்டது. தீப்ஸ், எவாயியா, லாமியா முதலிய இடங்கள் முக்கியமாக விடுவிக்கப்பட்டன.

டோடிகானிஸைச் சேர்ந்த ஸகார்பாண்டோவும், ஈஜியன் கடலிலுள்ள லெம்னாஸும் ஆக்கிரமிக்கப்பட்டன.

இதாலி.—பொலோனாவுக்கு முன்னேறும் படைகள் கீழ்கண்ட இடங்களைக் கைப்பற்றின. செசானா, சொர்வியா, காசனாடிகோ, சிவிடெல்லா டி ரோமாக்னா, காபாடா. நேசதேசப் படைகள் ராவெனாவை அணுகி வருகின்றன.

தென்மேற்கு பஸிபிக், பிலிப்பைன்ஸ்.—ஒரு பெரிய அமெரிக்கப்படை கடல் மூலமாகவும், விமான மூலமாகவும், மத்திய பிலிப்பைன்ஸில் லேடி, பானன் என்ற தீவுகளிலிறங்கிவிட்டன. இந்தத் தீவுகள் மிண்டானோ தீவுக்கருகிலுள்ள விசாயாஸ் கூட்டத்தைச் சேர்ந்தவை. லேடியின் தலைநகரமான டாக்லோபான் பிடிபட்டது. பிலிப்பைன்ஸிலிருந்த பழைய நிர்வாகம் மறுபடியும் ஸ்தாபிக்கப்பட்டுவிட்டது. படைகள் இறங்கியபின் கனுவான் உள்பட மூன்று தீவுகள் பிடிபட்டன. லேடிக்கு வடகிழக்கிலுள்ள ஸான் ஜுவானிடோ ஜலசந்தியைத் தாண்டி அமெரிக்கர்கள் சாமால் தீவில் முன்னேறும் வாசலை ஏற்படுத்திவிட்டார்கள். எதிரியின் கடற்படைகள் பிலிப்பைன்ஸிலுள்ள சிபூயன், சூசி கடல்வழியாக வேகமாகச் செல்லுகின்றன.

மற்ற பசிபிக் பிராந்தியங்கள் அக்டோபர் 23-ம் தேதியன்று அமெரிக்க கடற்படை பிலிப்பைன்ஸுக்கருகில் கடற்போரில் ஜப்பானுக்கு ஒரு தோல்வியை அளித்தது. அதில் 2 விமானந் தாங்கிக் கப்பல்களும், ஒரு யுத்தக்கப்பலும் உள்பட 9 யுத்தக் கப்பல்களை ஜப்பான் இழந்தது. மற்றும் 20 யுத்தக்கப்பல்கள் பழுதுபடுத்தப்பட்டன. ஜப்பானிய கடற்படை ஓட்டம் பிடித்துவிட்டது.

மேற்கு காரோலைன்ஸ் தீவுகளிலுள்ள நிகுளு வலைகுடா ஆக்கிரமிக்கப்பட்டது.

பார்மோஸா மறுபடியும் தாக்கப்பட்டது.

பர்மா.—டிட்டிமைப் பிடித்த 11வது சேனை சிண்ட்வின் பள்ளத்தாக்கிலுள்ள காலேமியோவை நோக்கி முன்னேறுகிறது.

சின் மலைகளிலுள்ள ஜப்பானிய நிர்வாகத் தலைமை காரியாலயமான பாலானும், ஹாகா என்ற முக்கிய நகரமும் பிடிபட்டன. அரக்கானில் லாபாவா ஆக்கிரமிக்கப்பட்டது.

வங்காள விரிகுடா.—நேசதேச கிழக்குக்கடற்படை நிகோபர் தீவுக்கூட்டத்தைச் சேர்ந்த கார்நிகோபார், நான்கொளரித் தீவுகள் பேரில் மூன்று தடவை பீரங்கிப் பிரயோகம் செய்தன.

சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

14—10—44. (சனிக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.-ரயில்வே தளவாடங்கள் தயார்செய்து சேமிக்குமிடங்கள் இதர இலக்குகள்.—கொலோன் (Cologne).

ராணுவ தொழிற்சாலை இலக்குகள்.—ஸார்பிரக்கன் (Saarbrucken), கெய்ஸர்ஸ்லாடர்ன் (Kaiserslautern) பிரதேசம்.

துருப்பு முகாம்கள், இதர முனைகள்.—ஆக்கன் பிரதேசம் (Aachen) ஷெல்ட் (Scheldt).

பீரங்கி ஸ்தாபனங்கள், ரஸ்தா, ரயில் போக்குவரத்துகள்.—பொலோனு (Bologna) பிரதேசம்.

கப்பல்கள்.—அட்ரியாடிக் (Adriatic).

விமானச் சண்டைகள்.—கிழக்கு யுத்த அரங்கம்.—(67 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

இரவு.-இலக்குகள்.-ஹாம்பர்க் (Hamburg), பெர்லின் (Berlin).

தூரக்கிழக்கு (Far East).

இலக்குகள்—ஸீரம் (Ceram), போரோ (Boeroe).

விமான நிலயங்கள்.—ஹாரோகோ (Haroekoe), அமாஹை (Amahai), கெய்ரிடோ (Kairatoe).

நிக்கல் தொழிற்சாலை.—ஸெலிபஸ் (Celebes).

பர்மா (Burma).

போக்குவரத்துகள், பாலங்கள்.—வட பர்மா (North Burma).

15—10—44 (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—தொழிற்சாலை.—இலக்குகள்.—ரூர் (Ruhr), டியிஸ்பர்க் (Duisberg).

ஜெர்மன் தற்காப்புகள்.—ஆக்கன் (Aachen).

விமானச் சண்டைகள்.—கிழக்கு அரங்கம் (67 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

ரஸ்தா, ரயில் இலக்குகள்.—வட இதாலி (N. Italy).

பீரங்கிப் பாலங்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

இரவு.—பாலங்கள், ரயில் தளங்கள்.-ஸான் பெனிடெட்டோ (San Benidetto).

தூரக்கிழக்கு (Far East).

இலக்குகள்.-பார்மோஸா (Formosa).

விமான நிலயங்கள்.-மணிலா (Manila) வலைகுடா.

குரைல்ஸிலுள்ள பாராமுஷிரோ (Paramushiro).

போனின் தீவுக்கூட்டத்திலுள்ள இவோஜிமா (Iwojima).

இலக்குகள்.-டிரக் (Truk).

கப்பல்கள்.—பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள்.

பர்மா (Burma).

இலக்குகள்.-டிடிம் (Tiddim), காலிமியோ (Kalemyo).

இலக்குகள்.-பொல் (Foul) முனை, லாபாவா (Labawa).

16—10—44. (திங்கட்கிழமை).

ஜெர்மனியும் ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.-(54 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை; 49 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

ராணுவ இலக்குகள்—கொலோன் (Cologne).

எண்ணெய்க் கிணறுள்.—டஸ்ஸல்டார்ப் (Dusseldorf).

இலக்குகள்.—தென் கிழக்கு ஜெர்மனி (S. E Germany) ஸால்ஸ்பர்க் (Salzburg).

கடற்படை தளம்.—வில்ஹெம்ஷாவன் (Wilhemshaven).

எண்ணெய்க் கிணறுகள், விமானத் தொழிற்சாலைகள், ரயில் தளங்கள்.-ஆஸ்திரியா (Austria), செக்கோஸ்லாவாக்கியா (Czechoslavakia), ஜெர்மனி (Germany).

துருப்பு முகாம்கள், பீரங்கி ஸ்தாபனங்கள், ரயில் போக்குவரத்துகள்.-யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

கப்பல்கள்.—அட்ரியாடிக் (Adriatic).

திடீர்த் தாக்குதல்கள்.—யூகோஸ்லாவியா (Yugoslavia).

ரயில் தளங்கள்.—ஜாக்ரெப் (Zagreb).

விமானச் சண்டைகள்.-கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும் (79 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

இரவு.-விமான நிலயங்கள்.-ஹாலந்து (Holland), மேற்கு ஜெர்மனி (Western Germany).

சுரங்க வெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

தூரக்கிழக்கு (Far East).

எண்ணெய்க்கிணறு இலக்குகள்.—பார்னியோவிலுள்ள பாலிக் பாபன் (Balik Papan);

விமானதளம்,ஸப்ளைக் கு வியல்கள்.-ஒகாயமா (Okayama), பார்மோஸாவிலுள்ள ஹெய்டோ (Heito).

இலக்குகள்.—பிலிப்பைன்ஸ் லூஸான் (Luzon) கப்பல்கள்.

பர்மா (Burma).

விமானநிலயங்கள் —மெய்க்டிலா (Meiktila), தீபா (Thebaw), ஆன்பாக் (Onbauk).

படகுகள்.—மத்திய பர்மா (Central Burma).

மோட்டார்கள் படகுகள்.—ஓவா (Owa Bay) வளைகுடா.

17—10—44. (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—தொழிற்சாலை இலக்குகள்.—கொலோன் (Cologne).

ரயில் இலக்குகள்.—ஹாலந்து (Holland), மேற்கு ஜெர்மனி (Western Germany).

பாலங்கள்.—எஸ்கர்ச்சென் (Euskirchen).

நெருங்கிய உதவி.—இதாலியில் போரிடும் தரைப்படைகள்.

ரயில் இலக்குகள்.—ஜெர்மன் முனைகள்.—கிரீஸ் (Greece), யூகோஸ்லாவியா (Yugoslavia).

சேனைகள், யுத்த தளவாடங்கள் தயாரி செய்து சேமிக்குமிடங்கள்.—யூகோஸ்லாவியாவிலுள்ள வின்கோவி (Vincovci).

விமானச் சண்டைகள்.—கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும் (69 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய இலக்குகள்.—பிலிப்பைன்ஸைச் (Philippines) சுற்றிலும்.

பிலிப்பைன்ஸின் தலைநகரான மணிலா (Manila).

பைவானுரிக்பிரதேசங்கள்.-ரபால் (Rabaul), கேவியங் (Kavieng).

பர்மா (Burma).

விமான நிலயங்கள்.—ரங்கூன் (Rangoon).

பீரங்கி ஸ்தாபனங்கள், ஸ்டோர்கள்.—டிடிம் ரஸ்தா (Tiddim), காலிமியோ (Kalemyo) பிரதேசங்கள்.

18—10—44. (புதன்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—ரயில்வே இலக்குகள்.—மேற்கு ஜெர்மனி (Western Germany).

தொழிற்சாலை இலக்குகள் ரயில்வே தளங்கள்.—கொலோன் (Cologne) காஸல் (Kassel).

ரயில்வே ஸ்தலம்.—பான் (Bonn).

பாலங்கள்.—போலோக்ஞ (Bologna).

ரயில்வே தளங்கள்.-மோடோஞ (Modena).

கப்பல்கள்.—ஸாலோனிகா வளைகுடா.

விமானச் சண்டைகள்.—கிழக்கு யுத்த அரங்கம்முழுவதும். (91 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன.)

இரவு.—இலக்குகள்—ஹான்வர் (Hanver), மான்ஹீம் (Mannheim).

இதர லக்ஷியங்கள்.—மேற்கு ஜெர்மனி (Western Germany).

தூரக்கிழக்கு (Far East).

கப்பல்கள், விமான நிலயங்கள்.—ஸீரம் (Ceram), போரோ (Boeroe).

துறைமுகம்.—காகாயன் (Gagayan).

கப்பல்கள்.—ஹால்மஹேரா (Halmahera).

துறைமுகம்.—டச்சு நியூகினியிலுள்ள மானோக்வாரி (Manokwari).

பர்மா (Burma).

துருப்புகள், முகாம்கள்.—டிடிம் (Tiddim).

19—10—44. (வியாழக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—ராணுவ இலக்குகள்—மெய்ன்ஸ் (Mainz), லட்விக்ஷாபன் (Ludwigshafen).

ரயில் இலக்குகள்.—பவேரியா (Bavaria).

போக்குவரத்துக்கள், முனைகள்.—பிரெடெரிக் ஹெனடிரிக் (Frederick Hendrik).

ரஸ்தாக்கள் ரயில்வே லயன்கள், பாலங்கள்.-போ (Po) கணவாய்.

ரஸ்தா போக்குவரத்துக்கள்.—இதாலியில் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—கிழக்கு ஐரோப்பிய அரங்கம். (40 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

இரவு.—ராணுவ இலக்குகள்—ஸ்டட்கார்ட் (Stuttgart), நூரம்பர்க் (Nuremburg). வெயஸ்படன் (Weisbaden).

தூரக்கிழக்கு (Far East).

கிளார்க் விமான நிலயங்கள் இதர இலக்குகள்—மணிலா (Manila).

இலக்குகள்.—மிண்டானோ (Mindanao).
கப்பல்கள்.—டாவாவோ (Davao).
ஜப்பானிய கடற்படை தளம்.—ஷம்போன்கா (Zamboanga).

பர்மா (Burma).

கட்டடங்கள்.—டாங்குப் (Taungup).
ஸப்ளைக் துவியல்கள்.—புரோம் (Prome).
தலைமை ஆபீஸ்.—டிடிம் (Tiddim), காலிவா (Kalewa) ரஸ்தா.

20—10—44. (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—செக்கோஸ்லாவாக்கியாவிலுள்ள கிரஸ் (Crus) பிரதேசம்.
எண்ணெய்க் கிணறுகள்.—டான்யூப் (Danube), ரீசன்ஸ்பர்க் (Regensburg).
ரயில் தளங்கள்.—ரோஸென்ஹீம் (Rosenheim).
விமான நிலயங்கள்.—பாடாப்லிங் (Badabling).
மோட்டார் தொழிற்சாலைகள்.—இதாலியிலுள்ள மிலான் (Milan).
தளவாடத் தொழிற்சாலைகள்.—வட இதாலி (N. Italy).
பாலங்கள்.—போ (Po) நதி.
தரைப்படைகள்.—பொலோனு (Bologna).
ரஸ்தாக்கள், ரயில்வேக்கள்.—யூகோஸ்லாவியா (Yugoslavia).
இரவு.—பாலம்—ஸான் பெனிடெட்டோ (San Benedetto).
விமான நிலயங்கள்.—ஹாலந்து (Holland), மேற்கு ஜெர்மனி (Western Germany).
சுரங்க வெடி பாவுதல்.—எதிரி கடற்கரைப் பிரதேசங்களில்.

தூரக்கிழக்கு (Far East).

எதிரிக் கப்பல்கள்.—ஸுலு (Sulu) ஜாம்போங்கா (Zamboanga) தீவுகள்.
ஜப்பானிய விமான நிலயங்கள்.—சிபு (Cebu).
ஜப்பானியக் கப்பல் விமான நிலயங்கள்.—பிலிப்பைன்ஸ் (Philippines).
ஜப்பானிய இலக்குகள்.—பார்மோஸா (Farmosa).

பர்மா (Burma).

விமான நிலயங்கள்.—ரெங்கூனைச் சுற்றிலும் (Rangoon).
மேல்மீன் (Moulmein).
இலக்குகள்.—டிடிம் (Tiddim) கலிமியோ (Kalemyo) ரஸ்தா.

21—10—44. (சனிக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—ரயில் இலக்குகள்.—ஜெர்மனியும் ஹாலந்தும் (Holland).
துருப்புகள் முகாம்கள் முனைகள், பீரங்கி ஸ்தானங்கள்.—மேற்கு முனைகளிலுள்ள யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.
ஸப்ளை ரயில்கள், பீரங்கி ஸ்தாபனங்கள், துருப்பு முகாம்கள்.—வடக்கு இதாலி (North Italy).
கப்பல்கள்.—ஏட்ரியாடிக் (Adriatic).
ரயில் தளங்கள்.—மாரிபார் (Mariebor).
விமானச் சண்டைகள்.—கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும் (26 எதிரி விமானங்கள் நாசமாக்கபட்டன).
இரவு.-இலக்குகள்—மேற்கு ஜெர்மனி (Western Germany).

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியச் சைனியங்கள்.-லெய்டி (Leyte).
ஜப்பானியக் கப்பல்கள்.—பிலிப்பைன் (Philippine).

பர்மா (Burma).

ஜப்பானியச் சைனியங்கள்.-ஸ்தாபனங்கள்.—பர்மா (Burma).
பாலங்கள்.—லாஷியோ (Lashio).
லுங்லிங் (Lungling).

விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

15—10—44. (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

இடங்கள்.—தென் இங்கிலாந்து (South England); லண்டன் (London).

ருஷ்யா (Russia),

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

16—10—44. (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

சில இடங்கள்.—இங்கிலாந்தின் தென்கரை.

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

17—10—44. (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

சில இடங்கள்.—தென் இங்கிலாந்து; லண்டன் (London).

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கையில்லை.

18—10—44. (புதன்கிழமை).

பிரிடன் (Britain),

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

19—10—44. (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

20—10—44. (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

சில இடங்கள்.—தென்கிழக்கு இங்கிலாந்து (South-eastern England), லண்டன் (London).

ருஷ்யா (Russia).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

அமெரிக்கப்படைகளின் இறக்குதல்.—பிலிப்பைன்ஸ் லெய்டி (Leyte).

1 (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் இல்லை.

நுஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East)

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

22—10—44. (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain.)

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia.)

ஒரு தகவலும் இல்லை.

தூரக்கிழக்கு (Far East.)

அமெரிக்க முனைகள்.—லெய்டி (Leyte).

யுத்தக் குறிப்புகள்.

அயர்வு. மேற்கு, கிழக்குப் போர்முனைகளிலும், இதாலியிலும், நேசதேச முன்னேற்றத்தில் சற்று அயர்வு காணப்படுகிறது. இந்த சந்தர்ப்பத்தில் வேகம் ஏன் குறைந்துவிட்டதென்று சாதாரண மக்கள் கேட்கக்கூடும். என்ன நேர்ந்தது. புகாரஸ்டுக்குள்ளும், பெல்கிரேடுக்குள்ளும், செம்படை நுழைந்ததுபோல வேகமாக புடாபெஸ்டுக்கும், வியன்னாவுக்கும் ஏன் முன்னேறவில்லை. பிரான்ஸையும், பெல்ஜியத்தையும், விடுவித்த பிரிடிஷ் அமெரிக்க சேனைகள் ஹாலந்தில் ஏன் தயங்கி நிற்கின்றன. அவைகள் ஏன் ரைன்லாந்துக்குள்ளும், ரூருக்குள்ளும் ஸார் பிரதேசத்திற்கும் நுழையவில்லை? என்றெல்லாம் கேட்கிறார்கள். இதற்கு மறுமொழி சாதாரணமானது. இந்த அயர்வு நேசதேசப் படைகளை பலப்படுத்துவதற்கும், போக்குவரத்து மார்க்கங்களை அமைப்பதற்கும் அவகாசமளிப்பதுடன் எதிரியின் வலுவையும், போக்குவரத்துகளையும் உற்பத்தி நிலயங்களையும், அழிப்பதற்காக ஏற்பட்டதாகும். சென்ற வாரத்திலும் இந்த வாரத்திலும் மேஸ்பர்க், ஸ்டட்கார்ட், நூரம்பர்க் முதலிய இடங்களிலுள்ள ஜெர்மன் அணைகளையும், தொழிற்சாலைகளையும், போக்குவரத்து மார்க்கங்களையும், வெடி விமானங்கள் அழித்ததும் இந்த நோக்கத்தைப் பூர்த்தி செய்வதற்காகத்தான். இதே சமயத்தில் பிரிடிஷ் அமெரிக்கப் படைகளுக்குப்பின் ஜெனரல் டெம்ப்ஸி பெல்ஜியத்திலும், ஹாலந்திலுமுள்ள நேசதேச போக்குவரத்துகளை பலப்படுத்துகிறார். ஆண்ட்வெர்ப்புக்குப் போகும் வழியையும் சுத்திசெய்துவருகிறார். ஷெல்ட் நதியின் முகத்துவாரத்தில் தற்காப்பு செய்துகொண்டு ஜெர்மானியர்கள் ஆண்ட்வெர்ப்புக்குப்போகும் மார்க்கத்தை வழிமறித்து வருகிறார்கள். நேசதேசப் படைகளுக்கு சர்பராக்களை இறக்க கால்வாய் கடற்கரையில் ஆண்ட்வெர்ப் தான் பெரிய சமீபத்திலுள்ள துறைமுகம். இது நேசதேச வசமாகாமல் செய்துவிட எதிரி முயற்சித்து வருகிறான். இந்த முயற்சியில் அவன் வெற்றிபெறமாட்டான்.

இந்த அவகாசத்தை பயன்படுத்துவதென்றும் மாரிகாலத்திற்குள் பின்லாந்து, பால்டிக், பால்கன் நாடுகள், இதாலி முதலிய இடங்களில் எஞ்சியுள்ள படைகளை இறுதி எதிர்ப்புக்காக ஜெர்மனிக்குத் திருப்பிக் கொண்டுவந்துவிடுவதென்றும், போர்புரியும் சக்தியை ஓட்டியில்லா விமானங்கள், டாங்கிகள், நீர்மூழ்கிகள், சேர்க்கை எண்ணெய் முதலியவற்றை உற்பத்தி செய்வதன்மூலம் அதிகரித்துவிடுவதென்றும் எதிரி திட்டம் போட்டிருக்கிறான். ஹிட்லர் சமீபகாலத்தில் வெளியிட்ட அறிக்கையிலிருந்து ஜெர்மனிக்கு அனுகூலமான ஷரத்துகளுடன் சமாதானம் செய்துகொள்ளுவதென்று ஹிட்லர் நம்பியிருக்கிறானென்றும் தெரியவருகிறது. இது வீண் ஆசை என்பதை நேசதேச அறிக்கைகள் ஸ்பஷ்டமாகச் செய்துவிட்டன.

இதே சமயத்தில் ஜெர்மனியின் உள்நாட்டு பிரச்னை ஹிட்லருக்கு அதிக கவலையை உண்டாக்கிவிட்டது. ரூர் பிரதேசத்தில் நாஸிகளை எதிர்த்து கலவரங்கள் உண்டாகிவிட்டன. கலகம் செய்கிறவர்களை டாங்கிகள், யந்திர பீரங்கிகள், கண்ணீர் வாயுவை பிரயோகித்து அடக்கி விடுவோமென்று ஹிம்லர் கடுமையாக எச்சரித்திருக்கிறான். ரூரில் நடைபெற்ற ஒரு கலகத்தை வாப்பன் S. S. படைகள் அடக்கிவிட்டன என்று ஸ்டாக்ஹோமிலிருந்து ரிபோர்ட்டுகள் வந்திருக்கின்றன. ஸ்டாக்ஹோமுக்கும் பெர்லினுக்கும் டெலிபோன் போக்குவரத்து 5-நாட்கள் வரையில் நின்றுபோனதற்கு ரூரிலும், ரைன்லாந்திலும், முக்கியமாக டஸ்ஸல் டார்ப், கொலோன், ஸார் பிரக்கன் முதலிய இடங்களிலும் தொழிற் சாலைகளில் கலவரம் ஏற்பட்டதுதான் காரணம் என்று டெயிலி மெயிலில் ஒரு ரிபோர்ட்டு வந்திருக்கிறது. சமீபகாலத்தில் இந்த பிரதேசங்கள்பேரில் வெடிகுண்டுகள் ஏராளமாக வீசப்பட்டன. விமானத் தாக்குதலுக்குப்பின் நேசதேசப் படையெடுப்பு ஏற்படும் என்ற பீதி, அங்குள்ள ஜனங்களுக்கு ஏற்பட்டதினால்தான் அவர்கள் நாடுகளைவிட்டு வெளியேறுவதும் கலகம் செய்வதும் சம்பவித்தன.

மேற்கு ஜெர்மனியில், ஒற்றர்களும், நாசவேலைக்காரர்களும், ஏராளமாக இருக்கிறார்களென்று சொல்லப்படுகிறது. உணவுப்பொருள் சப்ளை குறைந்துவிட்டது. அதற்காக அடிக்கடி கலகங்கள் ஏற்படுகின்றன. கடுங்குளிர் ஆரம்பமாகிவிட்டது. இடிந்த வீடுகளிலும், உஷ்ணமான ஆடைகள், வாயு, மின்சாரம், விறகு இல்லாமலும் வசிப்பது எவ்வளவு கஷ்டமானதென்பதை இப்பொழுதுதான் அவர்கள் அறிகிறார்கள்.

வி வி வி வி வி

ஜெர்மன் உள்நாட்டு சேனை. நிலைமையை சமாளிக்க ஜெர்மனியில் ஒரு புதிய பொதுஜன சேனை தயாரிக்கப்பட்டிருக்கிறது. இது இரண்டாவது பூர்ணமான படைத்திரட்டு என்று ஹிட்லர் சொல்லுகிறான். 16-முதல் 60-வயது வரையிலுள்ள ஆடவர்களெல்லாம் சேனையில் கட்டாய சேவை செய்ய அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இந்த சேனை தாய் நாட்டைத் தற்காப்பு செய்யவேண்டுமாம். இதற்கு ஹிம்லர் தலைமை வகிப்பாரென்றும் அதன் சோல்ஜர்கள் எவ்வகைப்பட்டவர்களென்றும் நாம் அறியக்கூடுமாதலால் எதிர்த்துப் போராடுவதற்கு அதற்கு சக்தி அதிகமிருக்காதென்று தோன்றுகிறது. இந்த சேனையில் ஸ்திரீகளும், சிறுமிகளும் சேர்க்கப்படுவார்கள். எந்நிலைமையிலும் பொதுஜன அமைதிக் குறைவைத் தடுக்க இது ஜெர்மன் ரகசியப் போலீஸுக்கு உதவுமேயல்லாது இது ஜெர்மன் சேனைக்கு ஒத்தாசை செய்ய உதவாது.

வி வி வி வி வி

ஆகென். நேசதேச முன்னேற்றத்தில் சற்று அயர்வு ஏற்பட்டிருந்தபோதிலும், இந்த வாரத்தில் நேசதேசத்தாருக்கு வெற்றி கிடைக்காமலில்லை. போர்முனைக்குப்பின் அடுத்த தாக்குதலுக்காக மகத்தான ஆயத்தம் செய்யப்பட்டு வரும்பொழுது ஒவ்வொரு போர்முனையிலும் குறிப்பிடத்தக்க வெற்றிகள் நேசதேசத்தாருக்குக் கிடைத்திருக்கின்றன. மேற்குப் போர்முனையில் ஸிக்பிரட் அரணில் ஆகென் விழுந்துவிட்டது. ஒரு வாரமாக அதை உறுதியுடன் ஜெர்மானியர்கள் தற்காப்பு செய்த பின் அதன் ராணுவ முக்கியத்துவம் போய்விட்டதென்று அவர்கள் சொல்லிவந்த போதிலும், ஜெர்மனியிலுள்ள நகரங்களில் இதுதான் முதன் முதலில் வீழ்ச்சி பெற்றிருக்கிறது. இதன் மூலம் ரைன்லாந்துக்கும் ரூருக்கும் போகும் மார்க்கம் திறக்கப்பட்டுவிட்டது. ஆகென் சரித்திர பூர்வமாக பிரசித்தி பெற்றது. இங்கு சார்லிமேன் என்ற மன்னர் ஆட்சி புரிந்தார். அதில் கந்தகச் சுரங்கங்களிருக்கின்றன. டச்சு, பெல்ஜிய எல்லைச் சரகங்களை ஒட்டி அது இருக்கிறது. கொலோனுக்கும், டஸ்ஸல்டார்புக்கும், இதிலிருந்து போக்குவரத்துகளிருக்கின்றன. இங்கு அநேக தொழிற்சாலைகளிருக்கின்றன.

வி வி வி வி வி

கிழக்குப் போர்முனை. ஆர்க்டிக் முதல் எட்ரியாடிக் வரையில் 800 மைல்கள் கொண்ட போர்முனையில் ருஷ்யர்கள் போர்புரிந்து வருகிறார்கள். கரிலியன் பகுதியிலுள்ள துருப்புகள் ஆர்டிக்கிலுள்ள பெட்ஸாமோவிலிருந்து நார்வேயின் கடற்கரைக்கு முன்னேறி கிர்கனிஸ் துறைமுகத்தை விட்டன. ரீகாவைத்தாண்டி முன்னேறிய படைகள் கிழக்கு பிரஷ்யாவுக்குள் 20 மைல்கள் முன்னேறிவிட்டன. பால்டிக் கடற்கரையிலுள்ள டான்ஸிக் துறைமுகத்தை நோக்கி செம்படை புதிய தாக்குதலைத் துவக்கியிருக்கிறது. மத்தியஐரோப்பாவிலும், பால்கன் நாடுகளிலும், ஜெர்மனிக்கு நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுவிட்டது. கார்பேதியன் மலைகளிலுள்ள ஆறு கணவாய்கள் வழியாக ருஷ்யர்கள் செக்கோஸ்லவாகியாவுக்குள் முன்னேறி வருகிறார்கள். ஒன்பது நாட்கள் போருக்குப்பின் ஹங்கேரிய சமவெளியை தற்காப்பு செய்துவரும் டெப்ரக்ஸான் விழுந்துவிட்டது. ஹங்கேரியின் தலைநகரமான புடாபெஸ்டுக்கு 50 மைல் தூரத்திற்குள் ருஷ்யப்படை வந்துவிட்டது. உள்நாட்டுக் கலகம் நடைபெற்றுவரும் புடாபெஸ்ட்டு அவசர அவசரமாக கோட்டையாக அமைக்கப்படுகிறது. மாஸ்கோ வியாக்யானி பின்வருமாறு சொல்லுகிறார். "இப்பொழுது புடாபெஸ்டில் ஜெர்மனி எது செய்தாலும் பகடை உருட்டியாகிவிட்டது. ஜெர்மனியின் நிலைமை, முக்கியமாக தென்கிழக்கு ஐரோப்பாவில், நிதர்சனமாகிவிட்டது. கிழக்கிலும், மேற்கிலும், தெற்கிலும் அதன் வாசற்படியில் வெடிமருந்து பீப்பாய்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஜெர்மனியின் பொதுவான, ராஜிய நிலைமையை மதிப்பதற்கு ஹங்கேரியின் சம்பவங்கள் போதுமானவை. நிலைமை ஜெர்மனிக்கு நாசமென்பதை ருசிப்பிக்கிறது".

வி வி வி வி வி

பெல்கிரேட். யூகோஸ்லாவியாவின் தலைநகரம் விடுவிக்கப்பட்டது. ருஷ்யா டிடோப்படைகள் ஆல்பெனியாவின் எல்லைச் சரகத்தை அணுகிவிட்டன. கிரீஸில் பிரிடிஷ் படைகள் ஆதென்ஸிலிருந்து 100 மைல்கள் முன்னேறி தீப்ஸ் என்ற புராதன நகரத்தை விடுவித்துவிட்டன. வடக்கிலுள்ள ஸலோ

னிகாவை ஜெர்மானியர்கள் காலி செய்து வருவதாகச் சொல்லப்படுகிறது. ஜெர்மனிக்கு வெளியில் ஒரு இடத்தையும் இப்பொழுது காப்பாற்றுவதற்காக அதற்கு உத்தேசம் இல்லை. எவ்விதம் அவைகளிலிருந்து தப்பி ஓடுவதென்றுதான் அது கவலை கொண்டிருக்கிறது.

கிரேக்கத் தீவுகள் ஒன்றன்பின் ஒன்றாக விடுவிக்கப்படுகின்றன. டோடிகானிஸ் தீவுக் கூட்டத்தைச் சேர்ந்த ஸ்கார்பெண்டோவும் டார்டனல்ஸுக்கு எதிர்த்தாற்போலுள்ள லெம்னூஸும் இந்த வாரத்தில் விடுவிக்கப்பட்டன.

வி வி வி வி வி

1944 1944-ம் வருஷம் சரித்திரத்தில் கியாதிபெற்றதாகும். இந்த வருஷத்தில் ரோமும், பாரிஸும், ஆதென்ஸும் விடுவிக்கப்பட்டன. இவை மூன்றும் ஐரோப்பாவின் நாகரீகத்தைக் காப்பாற்றிவந்த புராதனமான தலைநகரங்கள். கலைஞானத்திற்கு மூலபலம் போன்ற இந்த நகரங்களை காட்டுமிராண்டிகளிடமிருந்து விடுவித்ததில், நேசதேசத்தார்கள் அழியாப்புகழ் பெற்று விட்டார்கள். ஆதென்ஸின் விடுதலையைப்பற்றி எழுதும்பொழுது டைம்ஸ் பத்திரிகை கிரீஸின் புகழைப் பாராட்டிப் பின்வருமாறு சொல்லுகிறது.

"மற்ற இடங்களில் ஏற்பட்ட தோல்விகளின் காரணமாக எதிரி பின்வாங்கிவிட்டதி லிருந்து, விலை மதிக்கக்கூடாத புராதனச் சின்னங்கள் சிதைபடாமல் ஆதென்ஸ் மறுபடியும் மீட்கப்பட்டுவிட்டது. கிரீஸை நேசிக்கிறவர்களுக்கு இதில் மூன்று முக்கிய அம்சங்கள் தோன்றும். முதலாவதாக, பிண்டார் சொல்லுகிற பிரகாரம் அதினியர்கள் சுதந்திரத்துக் காக அஸ்திவாரம் போட்ட இந்த நகரம் ஐரோப்பாவின் ஆத்மிய குணங்களை நிலைநாட்டி வருகிறது. இந்த ஐஸ்வர்யங்களைக் காப்பாற்றத்தான் நாம் போர் புரிந்தோம். இரண்டாவ தாக, 1940, 1941-ம் வருஷங்களில் ஏராளமான படைகளை எதிர்த்து தேசாபிமானப்படை கள் போராடினவென்றும், அதன்பின் எதிரிக்கு ஏராளமான உதவிப்படைகள் குவிந்தன வென்றும் அப்பொழுது தேசாபிமானப்படைகள் ஒளிகளில் பதுங்கி நின்று போரை நடத்தி வந்தார்களென்பதையும் இது ஞாபகப்படுத்துகிறது. மூன்றாவதாக, இந்த கிரீஸில் அபார மான அழிவும், வறுமையும், வியாதியும் குடி கொண்டிருந்ததென்றும், கொடுங்கோன்மையை எதிர்த்துப் போராடியதற்காக ஜனங்கள் அநேக கஷ்டங்களை அனுபவித்தார்களென்றும் வெளியாகுகிறது.

வி வி வி வி வி

பிலிப்பைன்ஸ் தீவுகள். இந்த வாரத்தில் பிலிப்பைன்ஸ் நமது கவனத்தைக் கவருகிறது. அக்டோபர் 20-ம் தேதியன்று, அமெ ரிக்கப் படைகள் கடல் மூலமாகவும், விமான மூலமாகவும், ஹால்மொகரா தீவிலிருந்து 600 கப்பல்களில் பிரயாணமாகி பிலிப்பைன்ஸின் மத்தியப் பகுதியிலுள்ள லேடி, பானோன் என்ற தீவுகளிலிறங்கின. லேடின் தலைநகரமான டாக்ளோபான் விழுந்துவிட்டது. பிலிப் பைன்ஸ் நிர்வாகமும் அதன் தலைவரான செர்கியோ ஒஸ்மெனுவும் அவருடைய நிர்வாக சபையும் மறுபடியும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

இரண்டு வருடங்களுக்குமுன் ஜப்பானியர் வஞ்சகமாக அமெரிக்கர்களைப் பின்வாங்கி ஓடும்படி செய்தபொழுது ஜனாதிபதி ரூஸ்வெல்ட் முன் கூட்டியே பின் வருமாறு சொன்னார். "நாம் திரும்பி வந்துவிடுவோம்". அந்த வாக்குறுதியை ஞாபகப்படுத்தி அவர் பிலிப் பைன்ஸ் ஜனங்களுக்குப் பின்கண்ட செய்தியை அனுப்பியிருக்கிறார்.

"பிலிப்பைன்ஸுக்குத் திரும்பி வருவதாக நாங்கள் சொல்லியிருந்தோம். இந்தத் தீவுகளிலிருந்து ஜப்பானியர்களைத் துரத்தியடித்தபின் பிலிப்பைன்ஸ் சுதந்திரம் பெற்ற குடியரசு நாடாகவிருக்கும்.

"பிலிப்பைன்ஸுக்கு நாங்கள் திரும்பிவந்ததைப்பற்றி குதூகலப்படுகிறோம். நாங்கள் இத்துடன் நின்றுவிடப் போவதில்லை. லேடி ஜப்பானுக்குப்போகும் மார்க்கத்திலுள்ள ஒரு பாய்ச்சல் ஸ்தலம். அது பார்மோஸாவிலிருந்து 700-மைல்கள் தூரத்திலிருக்கிறது. சைனா விலிருந்து 850-மைல்கள் தூரத்திலிருக்கிறது. எதிரியின் சாம்ராஜ்ய ஜீவனாடியை நாம் தாண்டிவிட்டோம். இந்த ஜீவனாடியை நாம் துணித்துவருகிறோம்."

பிலிப்பைன்ஸில் படைகளிறங்கியதிலிருந்து அநேக முக்கிய சம்பவங்கள் நடைபெறக் கூடும். பிலிப்பைன்ஸ் இரண்டாகத் துண்டித்துவிட்டதுடன் கிழக்கு ஆசியாவில் ஜப்பா னின் சம க்ஷேம பேராசையையும் அது அழித்துவிட்டது. ஜப்பான் இப்பொழுது டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்தும், போர்னியோவிலிருந்தும், மலேயாவிலிருந்தும், பர்மாவிலிருந் தும் முக்கியமாக சம க்ஷேம முறைப்படி எண்ணெய், ரப்பர், அரிசி முதலியவற்றை ஜப்பான் கொள்ளையடித்துவந்த நாடுகளிலிருந்தும் துணிக்கப்பட்டுவிட்டது.

படைகளிறங்கியதின் அதிர்ச்சிகள் ஜப்பானில் பலமாக உண்டாகியிருக்கின்றன. ஜனாதிபதி ரூஸ்வெல்டிக்கு மார்ஷல் சியாங் கே ஷேக் அனுப்பிய செய்தியில் அவர் பின்வருமாறு எழுதுகிறார். "பிலிப்பைன்ஸ் நடவடிக்கையின் மூலம் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய விளைவுகள் சீனமக்களுக்கு அபரிமிதமான உத்சாகத்தை ஊட்டுகின்றன. ஜப்பானைக் கூடிய சீக்கிரத்தில் முற்றிலும் முறியடிக்கவேண்டுமென்ற முயற்சியில் எங்களை சாத்யமான முயற்சிகளை எடுத்துக்கொள்ள அவைகள் தூண்டக்கூடும்."

சியாங் கே ஷேக் வீண் ஆகாசக் கோட்டைகளைக் கட்டவில்லை. ஜப்பானின் நிலைமை மோசமாகிவிட்டதென்பதை இவ்வாரத்தில் வெளிவந்த செய்திகள் தெளிவுபடுத்தும்.

(1) நேசதேசப் படைகளின் படையெடுப்பை நிவர்த்திக்க ஜப்பான் பதில் தாக்குதலைத் துவக்க சக்தியை இழந்துவிட்டது. ஆகிலும் ஜப்பானின் ராணுவ அதிகாரிகளின் தற்காப்புத் திட்டங்களைத் துரிதமாக நிறைவேற்றிவருகிறது. (ஜப்பானிய ராணுவ அதிகாரிகளின் பிரமுகரான ஒருவர் ஜெர்மன் ஒலிபரப்புக்கு அனுப்பிய செய்தி).

(2) பிலிப்பைன்ஸில் நேசதேசப் படைகள் இறங்கியபின் சைனாவின் கடற்கரைகளில் நேசதேசப் படைகள் இறங்குவதைத் தடுக்க ஜப்பான் படைகளை ஏராளமாகக் குவித்து வருகிறது. (சுங்கிங்கிலிருந்து வந்த செய்தி).

(3) ஆமாய், பூசௌ, வெஞ்சௌவில் ஜப்பானியர்கள் நீர்மூழ்கி தளங்களைக் கட்டி வருகிறார்கள். ஹெங்க்சௌ விரிகுடாவிற்கும் ஷாங்க்ஹேயிக்கும் மத்தியிலுள்ள கோட்டைகளை அவர்கள் துரிதமாகக் கட்டிவருகிறார்கள். (சீன ராணுவ பிரமுகர்).

(4) ஜப்பானியக் கப்பல்கள் தெற்கு சைனா பிரதேசத்திலிருந்து வெளியேறி பாகியன் கடற்கரையிலுள்ள துறைமுகங்களில் ஒளிந்துகொள்ளுகின்றன. (நாங்கிங்கிலிருந்து வந்த செய்தி).

வி வி வி வி வி

பிலிப்பைன்ஸில் நேசதேசக் கடல் வெற்றி. பிலிப்பைன்ஸுக்கு அடுத்த ஸமுத்திரங்களில் நேசதேசத்தாருக்கு மகத்தான கடல் வெற்றி கிடைத்தது. அக்டோபர் 23-ம் தேதியன்று ஜப்பானியக் கடற்படைக்குப் படுதோல்வி ஏற்பட்டது. 2 விமானந்தாங்கிகளும், ஒரு போர்க்கப்பலுமுள்பட 9 யுத்தக்கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன. மற்றும் 20 கப்பல்கள் பழுதுபடுத்தப்பட்டன. ஜப்பானிய கடற்படை ஓட்டம் பிடித்துவிட்டது. அமெரிக்க கடற்படைப் பின்பற்றிச் செல்லுகிறது.

வி வி வி வி வி

டிட்டிம். இந்தியர்களின் தீரத்தின் பயனாக சின் மலைகளிலுள்ள டிட்டிம் பாலம் என்ற இரண்டு கிராமங்கள் நமது கவனத்தைக் கவர்ந்துவிட்டன. பர்மாவில் காபா பள்ளத்தாக்கிலுள்ள டிடிமை 14-வது சேனையைச் சேர்ந்த இந்தியத் துருப்புகள் விடுவித்தன. அவர்கள் இம்பாவிலிருந்து செல்லும் மிகவும் கஷ்டமான ரஸ்தா வழியாக 120 மைல்கள் சென்றிருக்கிறார்கள். 1942-ம் வருஷத்தில் பர்மாவிலிருந்து படைகள் பின்வாங்கிய பொழுது அவைகள் டிட்டிமில் தான் நிலைத்து நின்றன. அதன் பின் தெற்கு நோக்கி நடவடிக்கைகளைத் துவக்க டிட்டிம் தளமாக உபயோகப்படுத்தப்பட்டது. ஜப்பானியர்கள் இம்பாலுக்கு ஆபத்துண்டாக்க முயன்றபொழுது நாம் டிட்டிமை விட்டுவிட்டு அங்கிருந்த படைகளை நாம் இம்பாலுக்குக் கொண்டு போனோம். அதன் பின் இம்பாலிலிருந்தும், பிஷன்பூரிலிருந்தும், ஜப்பானியர்கள் துரத்தியடிக்கப்பட்டபின் அவர்கள் டிட்டிமை நோக்கிப் பின்வாங்கினார்கள். போகும்பொழுது அவர்கள் ரஸ்தாக்களை அழித்துவிட்டார்கள். அழிவின் அளவை அறிவதற்கு பின் கண்ட விஷயங்களை நாம் கவனித்தால் போதும். சாப்பர்களும், மைனர்களும், 2,000 அடி வரையில் பாலங்களை அமைக்கவேண்டியிருந்தது. 80 மைல் சுற்றிச் செல்ல வேண்டியதாயிற்று, 3,000 அடி உயரமுள்ள குறுகலான சாகலேட் பாதைகள் வழியாக 40 வளைவுகளை அவர்கள் தாண்டிச் செல்ல வேண்டியிருந்தது. புல்டோஜர் யந்திரங்கள் புதிய ரஸ்தாக்களை அமைத்துவந்தன. இவ்விதமாக சிரமப்பட்ட பின் தான் 14-வது சேனை டிட்டிமை அடைந்தது.

வி வி வி வி வி

பாலம். சின் மலைகளில் ஜப்பானிய நிர்வாகத்தின் தலைநகரமான பாலாமை ஜப்பானியப் படைகள் காலி செய்தன. இதிலிருந்து ஜப்பானியர்களின் செல்வாக்கு குறைந்துவிட்டதென்று நிச்சயமாய் வெளியாகுகிறது.

ஹாகா. சின்மலைகளிலுள்ள முக்கியமான நகரமான ஹாகாவும் விழுந்துவிட்டது.

இதைப் பிடித்த 14-வது சேனை தான் சில மாதங்களுக்கு முன் அரக்கானிலுள்ள நாகாகியே டாக்கைப் பிடித்தன.

வி வி வி வி வி

கார் நிகோபார், நான்கௌரித் தீவுகள். வங்காள விரிகுடாவிலுள்ள நிகோபார் தீவுக் கூட்டத்திலுள்ள இவ்விரண்டு தீவுகளும் இந்த வாரத்தில் மூன்று தடவை தாக்கப்பட்டன. பிரிடிஷ், ஆஸ்திரேலிய, டச்சுக் கப்பல் கூட்டம் கடற்கரையோரமாக மூன்று நாட்கள் வரையில் ரோந்து செய்த பொழுது இந்தத் தாக்குதல் நடைபெற்றது.

மற்ற கடற்படை சம்பவங்களும் நேரக்கூடும். கடற்படையின் முதல் பிரபுவான மிஸ்டர் A. V. அலெக்ஸாண்டர் அக்டோபர் மாதம் 21-ம் தேதியன்று பின்வருமாறு சொல்லியிருக்கிறார். "ஜப்பானிய கடற்படையுடன் தனிமையாகப் போர் புரியக் கூடிய ஒரு கடற்படையை பஸிபிக்கில் அமைக்க நாங்கள் உத்தேசித்திருக்கிறோம். பெரிய கடற்படையின் ஒரு பாகமும் அதன் பரிவாரங்களும் அசைந்து செல்லுகின்றன."

முக்கியமாக, அமெரிக்க கடற்படை பிரிடனிலிருந்து பிரான்ஸுக்குச் சென்று தூரக் கிழக்குக்குச் செல்லக் கூடிய பிரிடிஷ் கடற்படைகளுக்கு உதவியளித்து வருகின்றன. ஜெர்மானியர்கள் கிலிலிருந்து கப்பல்களை அப்புறப்படுத்தி வருகிறார்கள்.

வி வி வி வி வி

கடற்படை தினம். அக்டோபர் 21-ம் தேதியன்று யுக்தமாக இந்தியா கடற்படைதினத்தைக் கொண்டாடிற்று. அப்பொழுது ஒலிபரப்பில் பேசின இந்தியாவின் சேனாதிபதியான ஸர் கிளாடி ஆசின்லெக் இந்திய கடற்படையை பாராட்டி இந்தப் படையில் வாலிபர்களும், ஸ்திரீகளும் சேரவேண்டுமென்று வற்புறுத்தினார். அவர் சொன்னதாவது:—

அட்லாண்டிக் போரிலும், மத்தியதரைக்கடலிலும், செங்கடலிலும், பாரசீக வளைகுடாவிலும், இந்துமகா சமுத்திரத்திலும் இந்திய கடற்படை சஞ்சாரம் செய்திருக்கிறது

அவர் மேலும் சொன்னதாவது. "இந்திய கடற்படை எல்லோருக்கும் சிறந்த தொழிலை கற்பித்துவிட்டது. பிரிடிஷ் கடற்படையில் ஆபீஸர்களாகவும், படைகளாகவும் இந்தியாவின் யுவர்கள் சேரவேண்டுமென்று விரும்புகிறேன். கடற்கரை அதிகமாக உள்ள இந்தியாவில் ஜனங்கள் கடற்படையில் வேலை செய்யும் மனப்பான்மையுள்ளவர்களாகயிருக்க வேண்டும். எதிர் காலத்தில் இந்தியா கடலாதிக்கம் பெறுவது மெத்த அவசியமானதாகும்".

வி வி வி வி வி

மாஸ்கோ சம்பாஷணை. இந்த சம்பாஷணைகள் முடிந்துவிட்டன. மிஸ்ட்டர் சர்ச்சில் இங்கிலாந்துக்குத் திரும்பிவிட்டார். அங்கு என்ன நடைபெற்றதென்பது பரம ரகசியமாகும். வெற்றியின் இரு திட்டங்களைப்பற்றியும் போலந்து, பல்கேரியா, யூகோஸ்லவாகியா சம்பந்தமான பிரச்னைகளைப் பற்றியும் விவாதம் நடந்ததென்று சொல்லலாம். ஒரு முக்கிய சம்பவம் நிகழ்ந்திருக்கிறது. சர்ச்சிலும் ஸ்டாலினும் ஒருவரை ஒருவர் நன்ருய் அறிந்துகொண்டார்கள். சிநேகிதர்களாகவும் யுத்த சகாக்களும் அவர்களைப் பிரிந்தார்கள். இது ஒரு பெரிய வெற்றி. விச்ஹாம் ஸ்டீட் அவனுடைய அனுபவத்தை ஒட்டி பின்வருமாறு சொல்லுகிறார்.

"பிரிடனின் பிரதம மந்திரியும் அயல்நாட்டு மந்திரியும், ராணுவ ராஜதந்திர, ஆலோசகர்களும், மாஸ்கோவில் கூடியதினால் சாதாரண முறையில் சாதிக்கக்கூடியதைவிட சுலபமாக நேசதேசத்தார்களின் ஒத்துழைப்பு உத்தரவாதம் செய்யப்பட்டது. ராஜீய, ராணுவ ஒப்பந்தங்களைவிட அதிகமான சில ஒப்பந்தங்கள் ஏற்பட்டன. நிர்வாகஸ்தர்களுக்குள் நல்லுணர்ச்சியும் ஒப்பந்தம் ஏற்படுவதும் சகஜம். நிர்வாகங்களின் பிரதிநிதித்வமுள்ள பொறுப்புள்ள ராஜ தந்திரிகளினிடையே நல்லுணர்ச்சி ஏற்படுவது சிரமம். ஸ்டாலினும், சர்ச்சிலும், மோலடாவும், ஈடனும், ஒருவர் மற்றொருவருடைய அபிப்பிராயங்களையும், எண்ணங்களையும் லக்ஷியங்களையும் அறிந்துகொள்ளக்கூடுமானால் அவர்களின் கொள்கைகளை அன்யதாக்கிரஹணம் செய்வதற்கு முகாந்திரமே ஏற்பட்டது."

கிடுக்கியின் புஜங்கள் நெருங்கி வருகின்றன.

(விக்ஹாம் ஸ்டீட்).

ஐரோப்பியப் போரின் நீடிப்பு ஜெர்மனியின் ராணுவ எதிர்ப்பைப் பொருத்ததல்ல. யுத்தத்தின் சிரமங்களையும் நாசத்தையும் ஜெர்மானியர்கள் பொறுத்துக்கொள்ளும் தன்மையைத் தான பொருத்தாகும்.

வெளியிலிருந்து வரும் ஸப்ளை மார்க்கங்களும், துறைகளும் துணிக்கப்படும். நடுநிலைமை வகிக்கும் நாடுகளிலிருந்து உணவுப்பொருள்களும் தாவரப் பொருள்களும் கிடைக்கமாட்டாது. ஜெர்மனியின் ஒவ்வொரு யுத்த உற்பத்தி தொழிற்சாலையும் ராணுவ முக்யத்வமுள்ள ஒவ்வொரு நாடும், நகரமும் வெடி விமானங்களால் பலமாகத் தாக்கப்படும். சமீப காலத்தில் 3,000 நேசதேச வெடி விமானங்கள் ஜெர்மனியின் யுத்த உற்பத்தி தொழிற்சாலைகள் பேரில் 30,000 டன்கள் மொத்த எடைமானமுள்ள வெடி குண்டுகளை வர்ஷித்ததிலிருந்து நேசதேசத்தாரின் ஆகாய ஆதிக்கம் தெள்வுபடுகிறது. பலமான நடவடிக்கைகளுக்கும் இது துவஜாரோகணமாகும்.

பலமான நேசதேசப் படைகள் ஜெர்மனியின் மேற்கு எல்லைச் சரகத்தைத் தாக்கிவரும் பொழுது கிழக்குப் பக்கத்தில் பலமான ருஷ்யப் படைகள் கிழக்கு பிரஷ்யாவையும், கிழக்குப் போலந்தையும் நோக்கி முன்னேறி வருகின்றன. அவைகள் ஹங்கேரி வழியாக புடாபெஸ்டுக்கு வந்துவிட்டன. பால்கன் நாடுகளிலிருந்து ஜெர்மனி பின்வாங்கக் கூடிய மார்க்கங்களுக்கும் ஆபத்து உண்டாகிவிட்டது. எந்த கிழறுப்பான் வேலையும் இவ்விதமாக ஒன்றுபட்டு வளைத்து வரும் படைகளை எதிர்த்துப் போராட முடியாது. ஜெர்மன் சேனைகளும், ஜெர்மன் மக்களும் இந்த நெருக்கடியை எவ்விதம் சமாளிப்பார்கள் என்பதுதான் தற்போதிய பிரச்னை.

இதுவரையில் ஜெர்மன் சேனைகள் ஆக்கிரமிப்பு நாடுகளிலுள்ள ஐச்வர்யத்தைக் கொண்டு ஜீவித்து வந்தன. ஜெர்மன் மக்களுக்கு இதுவரையில் ஆக்கிரமிப்பு நாடுகளிலிருந்து உணவுப் பொருள்கள் அனுப்பப்பட்டு வந்தன. இந்த ஸப்ளைகள் இனிமேல் நின்றுவிடும். ஹங்கேரியையும் ஜெர்மனி இழந்துவிட்டால் அதன் ஐச்வர்யங்கள் குறைவுபட்டுவிடும். வெற்றி பெறுவதற்காக ஜெர்மனி உபயோகித்த பீதியும், கொள்ளையும், வறுமையும் இப்பொழுது ஜெர்மனியை வாட்டப்போகின்றன.

முதல் உலக யுத்தத்தில் அனுபவித்ததைவிட அதிக கஷ்டங்களை அனுபவித்து வரும் ஜெர்மன் மக்களுக்கும், அவர்களின் கஷ்ட நிவாரணத்துக்குமிடையே நாஸிதத்வமும் அதன் ராணுவமும் குறுக்கிட்டு நிற்கின்றன. எதிர்ப்பு நின்று போகும் வரையில் நேசதேசத்தார்கள் ஜெர்மனிக்குக் கொஞ்சம் கூட அவகாசம் அளிக்கப்போவதில்லை.

டெகரானில் சென்ற மாரிகாலத்தில் நேசதேசத் தலைவர்கள் தங்களுடைய அபிப்பிராயங்களை விவரணம் செய்தார்கள். "கிழக்கிலிருந்தும், மேற்கிலிருந்தும், தெற்கிலிருந்தும் ஆரம்பிக்கப்படும் நடவடிக்கைகளின் வியாபகத்தைப் பற்றியும் கால வரம்பைப் பற்றியும் நாங்கள் முடிவான அபிப்பிராயத்துக்கு வந்துவிட்டோம். எங்களுக்குள் ஏற்பட்டுள்ள நல்லுணர்ச்சியானது வெற்றி நமக்குத்தான் என்பதை உத்தரவாதம் செய்கிறது" என்று அவர்கள் சொன்னார்கள். 10 மாதங்களாக இந்த அறிக்கை கொஞ்சம் கொஞ்சமாக அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அது இறுதியில் பூர்த்தியடைவது தான் பாக்கியிருக்கிறது. மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில், மிஸ்டர் ஈடனும் இப்பொழுது மாஸ்கோவில் மார்ஷல் ஸ்டாலினுடனும், M. மாலடோவுடனும் ஆலோசனை செய்து வருகிறார்கள். இந்த மகாநாட்டில் முடிவான போரைப்பற்றியும் அதன் விளைவுகளைப்பற்றியும் நேசதேசங்களுக்குள் பரிபூர்ணமான ஒப்பந்தம் ஏற்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

யுத்தத்துக்குப்பின் சமாதானம், உலக பத்திரம் சம்பந்தமான ஸ்தாபனங்களை அமைக்கும் நேசதேச திட்டத்தின் சில பாகங்கள் முடிவு செய்யப்படாவிட்டாலும் பிரிடன், ருஷ்யா, அமெரிக்கா, சைனா முதலிய நாடுகள் டம்பார்டன் ஓக்ஸில் செய்த முடிவுகள் மிகவும் திருப்திகரமானவை. சர்வதேச சங்கத்தின் ஒப்பந்தங்களிலுள்ள குறைவுபாடுகள் அகற்றப்பட்டுவிட்டன. சமாதானத்தைக் கலைப்பவர்களை அடக்க நடவடிக்கைகளைத் துரிதமாக ஆரம்பிக்க திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன உலகநீதி ஸ்தலம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு சர்வதேச கவசம் பூண்ட ராணுவம் ஒத்தாசை செய்யும். அப்படைக்கு எல்லா தேசங்களும் துருப்புகளை அனுப்பவேண்டும். கலகம் செய்கிறவர்களைக் குறித்து நடுநிலைமை வகிப்பது மறைந்துவிட்டது. இந்த உலக திட்டத்திற்கு எவ்வித மாறுபாடுகளும் திருத்தப்பாடுகளும் யுக்தமாகயிருந்தாலும் அதன் முக்கியமான அம்சங்களில் மாறுதல் ஏற்படாது.

சர்வதேச பத்திரத்தை ஒன்றுபட்டு நிலை நாட்டுவதிலும் குறிப்பிடத்தக்க முற்போக்கு ஏற்பட்டுவிட்டது. பத்திரத்தை ஸ்தாபிப்பது ஒருபுறமிருக்க, பொருளாதாரத் துறையில் உருவான முன்னேற்றமடைய திட்டங்களும் போடப்படுகின்றன. பீதியின்மையுடன் வறுமையின்மையும் ஸ்வதந்திரமும் கிட்டிவிடவேண்டும்.

ஐரோப்பாவில் உயர்வான முடிவைச் செய்யும் காலம் நெருங்கிவிட்டது. அதை ஒத்தி வைக்க ஜெர்மனி எவ்வளவு ஊக்கமாகப் போர் தொடுத்தாலும், நடவடிக்கைகள் ஆரம்பமாகி விட்டனவென்று நாம் சொல்லக்கூடும்.

மேற்கு முனையில் நேசதேசப் படைகளின் முன்னேற்றம்.

தாக்குதலுக்கு முன் அயர்வு.

(கிருஸ்டாபர் பக்னி.—டெயிலி டெலகிராப் பத்திரிகை).

வரப்போகும் வாரங்களில் நம்முடைய முன்னேற்றத்தை நிர்த்தாரணம் செய்வதற்கு மூன்று அம்சங்கள் முக்கியமானவை—சர்பரா, எதிரியின் நடவடிக்கை, கால நிலை, கடைசியாக தற்போதிய நிலைமையில் ஜெர்மனிக்கு வெற்றி கிடைக்காது என்று நிச்சயமாகத் தோன்றிய போதிலும், எதிர்த்துப் போராடவேண்டுமென்பது ஜெர்மனியின் தீர்மானம்.

சர்பரா பிரச்னையை முதலில் கவனிப்போம். ஸெப்டம்பர் மாதத்தில் முன்னணி ஸ்தலங்களுக்கு சமீபத்திலேயே சர்பரா தளங்கள் அமைக்கப்பட்டு வந்தன. சர்பராக் குவியல்களிலிருந்து முன்னணிப் படை 24 மைல்கள் தூரத்திலிருந்ததுபோக இப்பொழுது நூற்றுக் கணக்கான மைல்களுக்கப்பாலில் சென்றுவிட்டன. நமது படைகள் கடற்கரையிலிருந்து கொஞ்ச தூரத்திலும், அதற்கு சமகோடாகவும் முன்னேறி வந்தபொழுது, ஆண்ட்வெர்ப் துறைமுகம் நமக்கு உபயோகமுள்ளதாக இருந்திருந்தால், இந்த வித்தியாசம் ஒரு பொருட்டாக இருந்திராது.

மாகான் எழுதிய புத்தகத்தைப் படித்து, கடல் தாண்டிப்போர் புரியும் தரைப்படைக்கு கடற்படை அளிக்கும் சௌகரியங்களில் இஷ்டம் போல் ஸப்ளைகளை அனுப்பக்கூடிய துறைமுகங்களை மாற்றி அமைத்துக்கொள்ளும் சக்தி தானென்று நாம் தெரிந்துகொள்ளவேண்டிய அவசியமிருந்திராது.

கால்வாய் கரையிலும் வடக்குக் கடல் கரையிலும் உள்ள துறைமுகங்களை நமக்குக் கிட்டாதபடி, செய்யவும் அதே சமயத்தில் ஜெர்மன் படைகளை ஜெர்மனியின் எல்லைச் சரகங்களுக்குப் பின்வாங்கிச் செல்லவும் காலஹரணம் செய்வதென்ற ஜெர்மனியின் யுத்த தந்திரம் மிகவும் சிலாக்யமானதென்று எல்லோரும் கருதுகிறார்கள். இதை நான் ஆமோதிக்கவில்லை. லேஹாவரும், பொலோனும், கலேயும் சிறிது காலம் சமாளித்து நின்று பின்பு வீழ்ச்சி பெற்றன. அந்த இடங்களில் எதிரி இழந்த துருப்புகளை அவன் காப்பாற்றியிருக்கலாம். கலேயிலிருந்தும் பொலோனிலிருந்தும் நமது போக்குவரத்துகள் வெகுதூரம் செல்லவேண்டியிருக்கும். இதற்கு ஆண்ட்வெர்ப் தான் அதிக சௌகரியமுள்ளது. அந்தத் துறைமுகத்தில் சமாதான காலத்தில் தினசரி 50,000 டன்கள் எடைமானமுள்ள சாமான்கள் இறக்குமதி செய்யப்படும். ஆண்ட்வெர்ப்பின் உபயோகத்தை மற்றெல்லாத் துறைமுகங்களின் ஒன்றுபட்ட அளவுக்கு ஒப்பிடலாம்.

ஹாரக்கின் துருப்புகள் ஆண்ட்வெர்ப்பைத் தாக்கியது சிறந்த நடவடிக்கை தான். ஆனால் அவர்களுக்கும் சப்ளைகளிலிருக்குமிடத்திற்கும் வெகுதூரமிருந்தது. வெகுநாட்களாகத் தயாரித்து வைத்திருந்த எதிரிப்படைகள் ஸீலாந்திலிருந்து அவர்களைத் தாக்கினார்கள். அந்த கேந்திரஸ்தானங்களை துரிதமாகக் கைப்பற்றவேண்டுமானால் வால்செரன் தீவையும் பெவிலாந்தையும் கடல் மூலமாகவும் விமான மூலமாகவும் சென்று தாக்கிவிடவேண்டும். இதை மேற்கொண்டிருந்தால் ஆர்ன்ஹெம், நிஜமேகன், நடவடிக்கையை ஒத்திவைத்திருக்க வேண்டும். இது நியாயமான நடவடிக்கையாக இருந்திராதென்று நான் நினைக்கிறேன்.

ஆனால் ஆண்ட்வெர்ப் இன்னும் நமக்குப் பயன்படக் கூடியதாக இல்லை. ஆகையால் யுத்தத்தில் சற்று அயர்வு ஏற்பட்டுள்ளது. சர்பராக்களில் முக்கியமாக பெட்ரோல், வெடிமருந்து, உணவுப் பொருள்கள், சேமிக்கப்படவேண்டியவை. மேலும் பழுது பார்ப்பதற்கும் சீர்கெடாமல் பரிபாலித்து வருவதற்கும் போதுமான சாதனங்களை வைத்துக்கொள்ளவேண்டும். விமானப் படைகள் முன்னணி தளங்களை அமைக்க நடவடிக்கையைத் துவக்கவேண்டும்.

நெபோலியனுடைய மேற்கோள் பிரகாரம். சேனை அதைச் சேர்ந்த மெதுவாகச் செல்லும் மோட்டார் வேகத்துடன் முன்னேறி வருகிறது. எதிரிகளின் நாட்டுக்குள் நுழையும் பொழுது ஸப்ளைகளை அபாயமான நிலைமையில் வைத்துக்கொண்டு துணிவுகரமாக முன்னேறக் கூடாது. ஸப்ளைகளை அழித்துவிட்டு ஒரே வேகமாக ப்ரஸ்ஸல்ஸுக்கு நாம் முன்னேறக்கூடாது. ஆண்ட்வெர்ப் துறைமுகம் உபயோகப்படும் நிலைமைக்கு வந்துவிட்டாலும் ஜெர்மனிக்குள் நுழைந்த பின்னும் நாம் மேலே சொன்ன எச்சரிக்கையை மனதில் இறுத்தி வைத்துக்கொள்ள்வேண்டும்.

அடுத்தபடியாக காலநிலைமையைக் கவனிக்கவேண்டும். அதிக மழை பெய்தால் சேர் உண்டாகும். சேரிருந்தால் துருப்புகளும், சாமான் போக்குவரத்துகளும் வேகமாகச் செல்ல முடியாது. சேனைகளும், ரஸ்தாக்களைத்தாண்டி வேறு வழியில் செல்ல முடியாது. ஆகையால் சேர், முன்னேறும் படைகள் மார்க்கத்தை வரையறுத்துவிடுகிறது. நடவடிக்கைகளும் அதன் மூலம் தாமதப்படுகின்றன.

இந்த மாரிகாலத்தில் முன்னேறி வரும் படைகளுக்கு சிரமமுண்டாகுமென்றால், ஜெர்மன் படைகளும், அந்த காலத்தை குதூகலமாக வறவேற்கிறார்களென்பதில்லை. சாதாரணமான ஜெர்மன் ஸோல்ஜர் எதிர்த்துப் போராடுவதை, புத்தி கெட்ட ஆட்டுமந்தைக் கொப்பிடக்கூடுமேயல்லாது கூண்டிலகப்பட்ட எலி எதிர்த்துப் போராடும் முறைக்குக் கூட ஒப்பிடமுடியாது.

ஆகென்.

(பாட்ரிக் லேசி பிரிடிஷ் ஒலிபரப்பில் பேசியது.)

ஆகெனைப் பற்றி நீங்கள் அநேகம் தடவை கேட்டிருக்கிறீர்கள். சமீபத்தில் அது முக்கியத்வமுள்ளது. ஏயிலாசாபல் என்று பிரெஞ்சுக்காரர்கள் சொல்லும் ஆகனில் சாதாரண காலத்தில் 1,65,000 ஜனங்கள் வசித்து வருகிறார்கள். இது முக்கியமான இருப்புப் பாதை மத்திய ஸ்தலம். இங்கு அநேக ரஸ்தாக்கள் கூடுகின்றன. மேற்கு ஜெர்மனியிலிருந்து வடக்கு பிரான்ஸுக்கும், பெல்ஜியத்துக்கும் போக்குவரத்து இதன் மூலமாக நடைபெறுகிறது.

சென்ற யுத்தத்துக்குப் பின் அநேக வருடங்கள் வரையில் ஜெர்மனியின் தொழிற்சாலைகள், பழைய ஸ்திதிக்கு வருமுன் ஆகென் வழியாக சாமான் ஏற்றிச்செல்லும் வண்டித் தொடர்கள் ரூரிலிருந்து தென் கிழக்கு பெல்ஜியத்துக்கு ஏராளமாகச் சென்றன.

அதில் நூறுக்கு மேற்பட்ட யுத்த தொழிற்சாலைகளிருந்தன. அவைகளில் அநேகம் அநேக மாதங்களுக்கு முன்பே வெடி விமானங்களால் நொறுக்கப்பட்டன.

ஆகென் பெரிய நகரமென்பதுடன் சரித்திரத்திலும் கீர்த்திபெற்றது. இது சார்லிமென் என்ற பெரியார் பிறந்த ஊர். அவர் இறந்து அங்கு சமாதியும் அடைந்தார். அவருடைய சாம்ராஜ்யத்தில் இது இரண்டாவது பெரிய நகரமாக அமைக்கப்பட்டது. இந்த இடத்தில் அநேக சக்ரவர்த்திகளும், மன்னர்களும் முடி சூட்டிக்கொண்டார்கள். அதன் மாதாக்கோவிலும் முடிசூட்டும் ஹாலும் ஜெர்மனியின் புராதன ஞாபகச்சின்னங்களாக இருந்தன. சென்ற இரண்டு நூற்றாண்டுகளாக அதன் ராஜீய, கலை ஞான முக்யத்வம் குறைந்துவிட்டது. இது மிகவும் முக்யத்வம் உள்ள ராணுவ ஸ்தலமென்று ஜெர்மானியர்கள் கருதுகிறார்கள்.

ஷெல்ட் நதியின் முகத்துவாரப் பிரதேசத்துக்காகப் போர்.

ஜெர்மனிக்கு பலமான நஷ்டம்.

(லெப்டினெண்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் ப்ரௌன்ரிக்).

மேற்குப் போர் முனையில் சற்று அயர்வு காணப்படுகிறது. மகத்தான தாக்குதலுக்கு முன் இவ்விதமாகத்தான் அநேகம் போர்முனைகளில் அயர்வு ஏற்பட்டிருந்தது. இரண்டு வருடங்களுக்கு முன் எல் அலாமீனில் ஏற்பட்டிருந்த அயர்வை நாம் ஞாபகப்படுத்திக்கொள்ளுவோம். ஜெனரல் அலெக்ஸாண்டரும், மாண்ட் காமரியும் 1942-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் எகிப்துக்குச் சென்றார்கள். அக்டோபர் மாதக்கடைசியில்தான் மாண்ட் காமெரி போரைத் துவக்கினார். கஸாலாவிலிருந்து பின்வாங்கிய படைகளைத் திருத்தியமைப்பதற்கும், மனித நஷ்டத்தையும், முஸ்தீப்பு நஷ்டத்தையும், ஈடு செயவதற்கும், பிரிடனிலிருந்து புதிதாகவந்த படைகளை அணிவகுப்பதற்கும் முன்னணி ஸ்தலங்களில் தண்ணீர், உணவுப் பொருள்கள், வெடி மருந்துகளைக் குவிப்பதற்கும் அயர்வு அவசியமாயிற்று. இவைகளில்லாமலே மாண்ட் காமெரி, ரோமலின் தற்காப்புகளை நொறுக்கியிருப்பார். ஆனால் அது பலமாகயிருந்திராது.

இதேவிதமாக வேனிஸியாவில் வார்ன் ஆர்னிமிடமுள்ள ஜெர்மன் சேனையை அழித்ததற்கும், ஸிஸிலியில் படையெடுத்ததற்கும், நடுவில் இரண்டு மாத அவகாசமிருந்தது அப்பொழுது சிலர் அபிப்பிராயப்படி ஸிஸிலிப் படையெடுப்புக்காக கப்பல்களைத் திரட்டுவதற்காக காலதாமதம் ஏற்படவில்லை. சர்பராக்களைக் குவிப்பதற்காகவும் காலதாமதம் ஏற்படவில்லை.

ஸிஸிலியிலுள்ள விமான தளங்களிலிருந்து எதிரியின் சண்டை விமானங்களையும், வெடி விமானங்களையும் துரத்தியடிக்க விமானிகளுக்கு அவகாசம் தேவைப்பட்டது. இந்த அவகாசத்தை அவர்கள் நன்றாய் பயன்படுத்தியதால் ஸிஸிலியில் முதன் முதலாகப் படைகளிறங்கியபொழுது ஸிஸிலிய விமான தளங்களிலிருந்து எதிரியின் ஒரு விமானம் கூட குறுக்கிடவில்லை. இதன் விளைவு யாதெனில் ஸிஸிலியிலிருந்து ஜெர்மானியர்கள் 38 நாட்களுக்குள் துரத்தியடிக்கப்பட்டார்கள். இரண்டுமாத காலஹரணத்துக்குத் தகுந்தபிரதிப் பிரயோஜனம் கிடைத்தது.

கொரடண்டின் தீபகற்பத்திலிருந்து மின்னல் வேகமாக முன்னேறியதற்குப்பின் அயர்வு அவசியமாக இருந்தது. அந்த அவகாசத்தில் படைகள் திருத்தி அமைக்கப்பட்டன. படை நஷ்டமும், முஸ்தீப்பு நஷ்டமும் ஈடு செய்யப்பட்டன. வெடி மருந்துகள், உணவுப் பொருள் ஸப்ளைகளும் குவிக்கப்பட்டன. எதிரிகளின் எதிர்ப்பு சக்தியையும், புத்துயிர் பெறும் சக்தியையும் நமது விமானிகள் அழித்து வந்தன.

விமானிகளின் சேவையை முதலில் கவனிப்போம். இந்த மாதத் துவக்கத்தில் இது வரையில் இல்லாதபடி ஜெர்மனி மிகவும் பலமாக வெடி விமானங்களால் தாக்கப்பட்டது. ஸெப்டம்பர் மாதத்தில் 20 நாட்களில் ஜெர்மனியிலுள்ள லக்ஷியங்களை கனமான வெடி குண்டுகள் தாக்கின. ஒரே நாளில் ஷெல்ட் நதி, டான்யூப் நதிகளுக்கு மத்தியிலுள்ள பிரதேசங்களை 5,000 வெடி விமானங்களும், சண்டை விமானங்களும் தாக்கின. இந்தத் தாக்குதல் மூலம் ஆயிரக்கணக்கான நேசதேச ஸோல்ஜர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட்டன.

இப்பொழுது நீண்ட காலமாக அயர்வு ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் யாதென்று நீங்கள் வினவலாம்? சில வாரங்களாகக் கால்வாய் கரையிலுள்ள துறைமுகங்களும் வடக்குக் கடல் துறைமுகங்களும் ஜெர்மானியர் வசமிருந்ததுதான் காரணமென்று எனக்குத் தோன்றுகிறது. இந்தத் தாமதத்துக்காக எதிரி 1 லக்ஷம் துருப்புகளை இழந்திருக்கிறான். இந்தப் படைகள் கூடுமானவரையில் துறைமுகங்களைக் காப்பாற்றுவதற்கும், ஜெனரல் ஈசன் ஹவரின் படைகளை நார்மண்டியின் கடற்கரை மார்க்கங்களிலிருந்து முன்னேறவொட்டாமல் தடுக்கவும் வைக்கப்பட்டிருந்தன.

இதற்கு ஆண்ட்வெர்ப் சிறந்த உதாரணமாகும். ஆண்ட்வெர்ப் துறைமுகத்தை அழிவின்றியில் நாம் கைப்பற்றிவிட்டபோதிலும், அதை நாம் உபயோகிக்க முடியாத சிரமம் ஏற்பட்டிருக்கிறது. ஏனெனில் துறைமுகத்திலிருந்து கடலுக்குச் செல்லும் மார்க்கத்திலுள்ள மேற்கு ஷெல்ட் நதியின் முகத்துவாரத்தின் இரு கரைகளும் ஜெர்மனியின் வசமிருக்கின்றன. பூட்டப்பட்டிருக்கும் கதவின் சமீபத்திற்கு நாம் சென்றிருக்கிறோம். அதன் திறவுகோலைக் கொண்டுவருகிறவரை நாம் எதிர் பார்த்து நிற்கிறோம்.

ஆண்ட்வெர்ப் நமது வசமாகிவிட்டபடியால் மோட்டார் லாரிகள் 80 மைல்களுக்குக் குறைவான தூரம் சென்றால் போதுமானது. அப்பொழுது நமது பிரயாண அளவு கால்பாகமாக மாறிவிடும். ஒவ்வொரு மோட்டார் லாரியும் நான்கு தடவை சாமான்களைக்கொண்டு போகும். மகத்தான தாக்குதலின்பொழுது, ஒவ்வொரு நாளிலும் ஒரு டிவிஷனுக்கு 100 டன்கள் எடைமானமுள்ள வெடிமருந்து தேவைப்படும் பொழுது, இந்த லாரிகளின் சேவை அபரிமிதமாகயிருக்கும்.

இந்த நோக்கத்துடன் கவனித்தால் ஷெல்ட் நதியின் முகத்துவாரத்தர்காக பிரிடிஷ்களுடைய முதல் சேனை செய்துவரும் போர் ஜெர்மனியை முறியடிக்கும் இறுதிப் போருக்குப் பேருதவிசெய்யக்கூடும்.

ஜெர்மன் முதலாளிகளின் இருப்பிடம்.

கிழக்கு பிரஷ்யா.

(எர்னஸ்ட் கோல்பார்ன்.)

ஜெர்மன் மாகாணங்களில் கிழக்கு பிரஷ்யாவில்தான் ருஷ்யப்படைகள் முதன்முதலில் புகுந்தன. இதற்கு நியாயமும் இருக்கிறது. கிழக்கு பிரஷ்யா பிரஷ்ய தத்வத்துக்கும்

முதலாளித்துவத்துக்கும் இருப்பிடமானதுடன் தேசிய ஜனசமத்துவக்கொள்கையை உடல், ஆவி எல்லாவற்றையும் ஈடுபடுத்தி ஏற்றுக்கொண்டதும் கிழக்கு பிரஷ்யாதான்.

ஜெர்மனிக்கு வெளியே ஜெர்மனியின் கிழக்கோடி மாகாணமான கிழக்கு பிரஷ்யாவைப் பற்றி ஒன்றும் தெரியவராது. ஏனென்றால் அயல்நாட்டு பிரயாணிகள் ஓடர் நதியைத் தாண்டி தூரக்கிழக்குக்குச் செல்லுவதில்லை. ஆகிலும் கிழக்கு பிரஷ்யா ஜெர்மனியின் ரமணீயமான பாகம். கிழக்கு பிரஷ்யாவுக்கு வடக்கு, வடமேற்கு எல்லைச்சரகமான பால்டிக் கடல் கடற்கரை சில இடங்களில் செங்குத்தாக இருக்கிறது.

கடலிருந்து உள்நாட்டிலுள்ள வளைகுடாக்களைப் பிரிக்கும் குரிஷ் ஹாப், பிரிஷி நேரஸ்க் என்ற மணல் குன்றுகள் மிகவும் அழகாகக் காணப்படும். வரட்சியான மணல் காற்றினால் அடிப்பட்டு ஆங்காங்கு மணல் அணைகளை அமைப்பதால் பூமியின் தோற்றம் அடிக்கடி மாறிவிடுகிறது. உள்நாட்டில் ஓபர்லாந்து, மாசூரியன் ஏரிகளும், விசாலமான காடுகளும் இருக்கின்றன. அவற்றில் ரோமிடன் காடு மிகவும் அழகானது, கியாதிபெற்றது. குரிஷே நேஸ்க் மணல் குன்றுகள் பாலைவனத் தோற்றமுள்ளவைகள். பாலைவனத் தோற்றத்தைக் காட்டும் சினிமாப் படங்கள் கிழக்கு பிரஷ்யாவிலுள்ள இந்த பாகத்தில் பிடிக்கப்பட்டன. யுத்த ஆரம்பத்தில் ஆபிரிக்கப் போருக்காக ஜெர்மன் படைகள் இங்குதான் தயாரிக்கப்பட்டன.

கிழக்கு பிரஷ்யாவில் ஜனத்தொகை அதிகமில்லை. 14,300 சதுர மைல்களுள்ள பரப்பில் 2,400,000 ஜனங்கள்தான் வசித்துவருகிறார்கள். அவர்களுக்கு விவசாயம்தான் முக்கியமான தொழில். ஆகிலும் ஜெர்மனிக்கே அது முக்கியமான தான்யக்களஞ்சியம். அது தான்யம், உருளைக்கிழங்கு, மேய்ச்சல் பொருள், சர்க்கரை வள்ளிக் கிழங்கு முதலியவற்றை ஸப்ளை செய்வதுடன் அங்கு புகையிலையும் பயிரிடப்படுகிறது. கிழக்கு பிரஷ்ய கால்நடைகளும், குதிரைகளும், முக்கியமாக டிரெகன் ஜாதியும் கியாதிபெற்றவை. அங்கு ஸ்விஷ் நிபுணர்களின் உதவியைக்கொண்டு பால்கட்டியும், வெண்ணெயும் ஏராளமாக உற்பத்தி செய்யப்படுகின்றன.

நாட்டில் உற்பத்தியாகும் இயற்கைப் பொருள்களில் ஆம்பரும் ஒன்று. இது முக்கியமாக பால்மிகனிலுள்ள அரசாங்க ஆம்பர் தொழிற்சாலையில் காணப்படுகிறது. கிழக்கு பிரஷ்ய தொழிற்சாலைகள் கோனிக்ஸ்பர்க்கிலும், எல்பிங்கிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் முக்கியமாக விவசாயக் கருவிகளை உண்டுபண்ணுகின்றன. இதைத் தவிர அநேக ரசாயனப் பொருள்களையும், ஸெல்லுலாயிடு சாமான்களையும், உற்பத்திசெய்யும் தொழிற்சாலைகளும், டான்சிக்கிலும், எல்பிங்கிலும், கப்பற்கட்டும் தளங்களுமிருக்கின்றன.

கிழக்கு பிரஷ்யா சம்பந்தமாக ஸ்லாவ் ஜாதியாருக்கும், பிரஷ்யர்களுக்கும், ஜெர்மானியர்களுக்கும் எப்பொழுதும் சச்சரவு நடந்துவந்திருக்கிறது. !கிழக்கு பிரஷ்யாவைப் போல மற்றெந்த ஜெர்மன் பிரதேசத்திலும் நாஸிகளின் ஜாதி உயர்வுக்கொள்கை அமுலுக்குக் கொண்டுவரப்படவில்லை. பழைய பிரஷ்யர்கள் டுடன் ஜாதியாரைச் சேர்ந்தவர்கள். பிரஷ்யக் குடும்பங்கள், ஊர்களின் பெயர்கள் வெளிப்படுத்துவதுபோல் கிழக்கு பிரஷ்யர்களின் பாஷையும், கலைகளும் லித்வேனிய, லாட்வியா தேசக்கலைகளுடன் சம்பந்தமுள்ளவை.

1306-ம் வருஷமுதல் 1466-ம் வருஷம் வரையில் டுடானிக் போர்வீரர்கள் பிரஷ்ய போலீஷ் ஜனங்களுடன் அடிக்கடி போரை நடத்திவந்தார்கள். 1910-ம் வருஷத்தில் அந்த வீரர்கள் படை டாஸன்பர்க்கில் போலீஷ், பிரஷ்ய, ஸெக் ஜாதியாரால் முறியடிக்கப்பட்டது. 1525-ம் வருஷத்தில் கிழக்கு பிரஷ்யா போலந்துக்குட்பட்ட நாடாகக் கருதப்பட்டது. பிராண்டன்பர்க்கைச் சேர்ந்த ஆல்பிரெக்ட் அதன் மன்னராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். எலக்டர் பிரெடிரிக் III காலத்தில்தான் கிழக்கு பிரஷ்யா ஹோஹன் ஸாலர்ண் வம்சத்தாரின் ஆக்ஷிக்குட்பட்டது,. பிரெடரிக் கோனிக்ஸ்பர்க்கோட்டையில் பிரஷ்யாவின் மன்னராக முடிசூட்டிக்கொண்டார்.

ஜெர்மனியின் மற்ற பாகங்களிலிருந்து, முக்கியமாக ஸால்ஸ்பர்க் என்ற ஆஸ்திரியாவிலிருந்து, குடியானவர்கள் இங்கு குடியேறினார்கள். ஹுகினட்ஸ்களும் ஹாலந்து பெல்ஜியத்திலிருந்து சில குடியானவர்களும் அங்கு வந்தார்கள். கிழக்கு பிரஷ்யாவில் அநேக ஜெர்மானியரல்லாத சிறுபான்மைக் கக்ஷிகள் காணப்படுகின்றன. உதாரணமாக, ஸ்டுஹம், மேரியன் வெர்டர், ஆஸ்டெரோட், மாசூரியன் ஏரிகளைச்சுற்றி, போல்களும், மாசூரியர்களுமிருக்கிறார்கள், கம்பினன், பல்ஸிடிக்கு சமீபத்தில் பெரிய லித்வேனிய குடியிருப்புகளுமிருக்கின்றன.

ராணுவ முறையில் அநேக ஏரிகளும், சதுப்பு நிலங்களுமிருப்பதால் கிழக்கு பிரஷ்யா மிகவும் சிரமசாத்யமான பூமி அமைப்புள்ளது. ஆகிலும் சதுப்பு நிலங்களும் நீர்ப்பாசன வசதிகளும் நவீன முறையில் டாங்கிகளைப் பெற்றிருக்கும் சேனைக்கு இடையூராக இருக்கமுடியாது. இவ்விதமான பூமிஅமைப்பு முன்னேற்றத்துக்குத் தடைசெய்ய முடியாதென்பதை பிரிபெட் சதுப்புநிலங்களில் வெற்றிபெற்றதன் மூலம் ருஷ்யா ருஜூச் செய்திருக்கிறது.

அக்காலம்.

ஜெர்மானியரின் அபிப்பிராயம்.

(ஆக்கிரமிப்பு ஜெர்மனியிலுள்ள டெயிலி மெயில் பத்திரிகையின் விசேஷ நிருபர் எழுதியது).

ஐரோப்பாவில் ஜெர்மனி ஆதிக்கம் பெற்றிருந்த நான்கு வருடங்களில் சாதாரண ஜெர்மானியர் எவ்விதமான வாழ்க்கையை நடத்திவந்தார்களென்று நான் ஆராய்ச்சி செய்திருக்கிறேன். சாதாரண ஜெர்மானியர் அதிக கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு இருந்தாலும் அவர்கள் நல்லமுறையில் வாழ்க்கையை நடத்திவந்ததால் அதை ஜெர்மனி முறியடிக்கப்பட்ட பின்னும் நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளக்கூடும்.

1932, 1933-ம் வருஷத்திலும் 1944-ம் வருஷ ஆரம்பத்திலும் சாதாரண ஜெர்மானியர் வெற்றியின் பலன்களை அனுபவித்து வந்தார்கள். கொள்ளைப்பொருள்கள் அனுப்பப்பட்டன. அவைகள் இப்பொழுது ஜெர்மனியில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. உணவுப்பொருள்கள் பூரணமாகவும், அறைகளில மரச்சாமான்களும், ரேடியோக்களும், சுகமான வாழ்க்கைக்குரிய அநேக சாமான்களும் காணப்படுகின்றன.

ஜெர்மன் ஸ்திரீகளை நோக்கினால் அவர்கள் ஒரு கஷ்டத்தையும் அனுபவிக்கவில்லை எனத் தெரிகிறது. அவர்கள் நல்ல ஆடைகளை அணிந்துகொண்டு சௌக்கியத்தை அனுபவித்தவர்கள் போல் காணப்படுகிறார்கள்.

ஆனால் இந்தப் பிராந்தியத்தில் வெடிகுண்டு வீச்சு இல்லை. எல்லையைத் தாண்டி கள்ள வியாபாரத்துறைகள் சமீபத்தில் இருந்தன.

வடக்கு ஆபிரிக்க யுத்தத்திற்குச் செல்லாமல் ஐரோப்பாவிலேயே தங்கி இருந்த ஜெர்மன் சிறுமிகளுக்கும், சிறுவர்களுக்கும், நான்கு வருடங்களும் விடுமுறை நாட்கள்போல் இருந்தது. ஆபீஸர்கள் மன்னர்களைப்போல் வாழ்ந்துவந்தார்கள்.

வாலிபமுள்ள ஜெர்மன் ஆபீஸர்களுக்கும், படைகளிலிருந்த சிறுவர்களுக்கும் அவைகள் உல்லாசமான காலம். இந்தச் சிறுவர்கள் கொடுமை செய்வது என்ற பானத்தைக் குடித்திருக்கிறார்கள். ஆக்கிரமிப்பு நாடுகளில் அவர்கள் அட்டகாசம் செய்து உத்தரவுகளை பிறப்பித்திருக்கிறார்கள். தாயகம் சென்று ஜெர்மன் சோல்ஜரின் அயல் நாட்டு வாழ்க்கை எவ்விதம் என்று குடும்பத்தாரிடம் சொல்லிக்கொண்டார்கள்.

சென்ற மூன்று வருடங்களாக ஒவ்வொரு ஜெர்மன் யுவரும் சிப்பாயாக இருப்பதின் பெருமையைப்பற்றி அநேக கதைகளைக் கேட்டிருக்கிறேன். இந்தக் கதைகள் மெய்யென்று தாயகம் திரும்பும் ஒவ்வொருவரும் சொல்லியிருக்கிறார்.

சென்ற சில மாதங்களாக நாம் ஜெர்மானியர்களை நடத்துவதிலிருந்து மேற்சொல்லிய அபிப்பிராயங்கள் வெளியாகி இருக்கும் என்று நேயர்கள் நினைக்கிறார்கள். ஆக்கிரமிப்பு நாடுகளிலுள்ள ஜெர்மானியர்களுடன் நான் கலந்து பேசியபோது அவ்விதமாக ஒன்றும் நடைபெறவில்லை என்று தோன்றுகிறது. நமது வசமுள்ள சாதாரண ஜெர்மானியருக்கு 1942 முதல் 1944 வரையில் நடைபெற்ற வாழ்க்கை என்றும் மறக்கமுடியாதது.

கிரீஸுக்கு அருகாமையில் கடற்படை நடவடிக்கை.

ஜெர்மன் தற்காப்புப் படைகளின் நிலைமை.

(*A. J.* மாக்வின்னி).

ஸ்வீடனிலுள்ள ஜெர்மன் கடற்படை ஸ்தானிகர் ஜெர்மனிக்குத் திரும்பிவர மறுத்துவிட்டதென்பது, ஜெர்மன் கடற்படை நிலைமை மோசமாகி விட்டதென்பதை அவர்கள் உணர்ந்துவிட்டார்களென்பதற்கு ஒரு அறிகுறியாகும்.

ஜெர்மன் கடற்தளபதிகள் எங்கு பார்த்தாலும் அவர்களிடம் எஞ்சியுள்ள சொல்பமான படைகள் ஆபத்துக்குட்பட்டிருக்கின்றன என்று காண்கிருர்கள். கடற்கரையிலுள்ள தற்காப்புப்படைகளுக்கு சர்பராக்களையும், உதவிப் படைகளையும் கொண்டுபோக ஜெர்மன் கப்பல்கள் நேசதேச யுத்தக்கப்பல்களுடையவும், விமானப்படையினுடையவும், முற்றுகையைத் தாண்டி எப்பாடுபட்டும் செல்லவேண்டும். ஆனால் அவைகள் துறைமுகங்களை விட்டுப் புறப்பட்டவுடன் அவைகள் பேரில் உயர்வான பிரிடிஷ் அமெரிக்க கடற்படை பாய்ந்துவிடுகிறது.

கிழக்கு மத்தியதரைக்கடலிலுள்ள நிலைமை மிகவும் ஸ்வாரஸ்யமானது. பிரெஞ்சு கடற்கரையைச் சுற்றி விரிவாகச் சுரங்கவெடிகளைப் பரவுவதன் மூலம் நேசதேசப்படையெடுப்புப்படைகளை நொறுக்கிவிடலாமென்று ஜெர்மனி நினைத்தது போல் ஏஜியன் தீவுகளைச் சுற்றிலும் சுரங்க வெடிகளைப் போட்டு நேசதேசக் கப்பல்களைத் தாக்கிவிடலாமென்று அது நம்பியிருந்தது.

ஆனால் சுரங்கவெடிகளுக்கும், அதை எதிர்க்கும் முறைகளுக்கும், நடக்கும் போராட்டத்தில் ஜெர்மனி இகழ்ச்சி பெற்று வருகிறதென்று மத்தியதரைக்கடல் பிரதேசத்திலிருந்து உத்தியோகமுறையில் அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. அதன் விவரம் பின்வருமாறு "அநேக நாட்களாக பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த சுரங்க வாரிக்கப்பல்கள் ஏஜியன் தீவுகளின் மத்தியிலும், டால்மேஷியன் தீவுகளின் மத்தியிலும் உள்ள மார்க்கங்களிலுள்ள ஜெர்மன் சுரங்கவெடிகளை அகற்றி வருகின்றன. சிரமங்களையும் பொருட்படுத்தாமல் இந்த வேலை மும்மரமாக நடைபெறுகிறது. அநேக சுரங்கவெடிகளை அகற்றிவிட்டோம்.

இந்த நடவடிக்கையிலிருந்து புதிய ரகசுரங்கவெடிகளைப் போடும் ஜெர்மனியின் குயுக்தியும் வீணாகப் போய்விட்டதென்று தோன்றுகிறது. எவ்வளவு நெருக்கமாகவும் தீங்கிழைக்கக்கூடியதாகவும் சுரங்கவெடிகள் ஜெர்மன் கடற்கரைகளைச் சுற்றிப் பரவப்பட்டிருந்தாலும் பிரிடிஷ், அமெரிக்கக் கப்பல்கள் தங்களுடைய லக்ஷியத்திற்குச் சென்றுவிடுகின்றன.

பிரெஞ்சு கடற்கரையிலும், இந்துமகா சமுத்திரத்திலும், பசிபிக் கடலிலும் நடைபெறும் சம்பவங்களைக் கவனித்து வரும் ஜனங்கள், பிரிடனும் அமெரிக்காவும் கிழக்கு மத்தியதரைக் கடல் பிரதேசத்தில் பலமான கடற்படையை வைத்திருக்கின்றனவென்பதை மறந்துவிட்டார்கள். இப்பொழுது புதிய தகவல்கள் கிடைத்திருக்கின்றன. இதற்கு முன் உலகத்தை பிரமிக்கச் செய்த பிரிடிஷ் சஞ்சாரிகள் கிரீஸுக்கருகில் இப்பொழுது நடவடிக்கையைத் துவக்கி, ஜெர்மன் ஸ்தானங்களை வெடிகுண்டுகளால் நொறுக்குகின்றன. மார்க்கத்தில் குறுக்கிடும் ஜெர்மன் கப்பல்களை மூழ்கடிக்கின்றன. கமாண்டோப் படைகளிறங்குவதற்கும் ரக்ஷணையளித்து வருகின்றன.

லெவிதா என்னும் தீவிலுள்ள ஜெர்மன் படைகள் சரண்புகுந்துவிட்டன. கிரேக்கத் துறைமுகமான நாப்ளியான் பிடிபட்டது. கிரேக்கப்படைகள் துருக்கி கடற்கரைக்கருகிலுள்ள ஸாமாஸையும், கார்புவையும் ஆக்கிரமித்துவிட்டன.

கடற்படை பலமில்லாவிடில் நேசதேச நடவடிக்கைகள் வெற்றிகரமாக நடைபெற்றிருக்கமுடியாது. 1941-ம் வருஷத்தில் கிரீட், கிரீஸ், ஈஜியன் தீவிலிருந்து பின்வாங்கிய பிரிடிஷ் கடற்படை இப்பொழுது அந்த இடங்களை ஜெர்மானியரிடமிருந்து மீட்க படைகளை இறக்கி வருகிறது.

கூடிய சீக்கிரத்தில் இந்த பிராந்தியத்திலிருந்து ஜெர்மானியர்கள் துரத்தப்படுவார்களென்று ஜெர்மன் ராணுவ, கடற்படைத் தலைவர்கள் அறிந்துவிட்டார்களென்பது நிச்சயம். ஈஜியன் தீவுக் கூட்டத்தைச் சேர்ந்த ஸாமாஸ் என்ற பெரிய தீவை ஜெர்மன் துருப்புகள் ஸெப்டம்பர் மாதம் கடைசியில்தான் காலி செய்தன.

எல்லைச் சரகங்களிலுள்ள ஜெர்மன் படைகளுடன் தொடர்பு கடல் மார்க்கமாகத்தான் ஏற்படுத்திக்கொள்ளமுடியும் என்று மிகவும் வெறிபிடித்த நாஸிகளும் கண்டு பிடித்துவிட்டார்கள். திறமையுள்ள கடற்படை இல்லாவிடில் போக்குவரத்துகள் தடைபடும். ஆகையால் கூடிய சீக்கிரத்தில் படைகள் உணவில்லாமலும், வெடிமருந்தில்லாமலும், சரணகதி செய்ய வேண்டியதாக ஏற்பட்டுவிடும்.

துணைக்காவல் கொண்ட சாமான் கப்பல்களின் போக்குவரத்தைத் தடுத்து விடலாமென்று ஜெர்மனி நினைத்தது. கப்பல்கள் கூட்டமாக வந்தால் யூ-படகுகளுக்கு ஏராளமான லக்ஷியங்கள் கிடைத்துவிடுமென்று அது நினைத்தது. ஆனால் உயர்வான கடற்படை அனுபவத்தை ஒட்டியுள்ள பிரிடனின் திட்டம் நிறைவேறிவிட்டது. யுத்த ஆரம்பத்திற்குப் பின் துணைக்காவல் கொண்ட பிரிடிஷ் கப்பல்களில் 96.6 சத விகிதம பத்திரமாக போய்ச் சேர்ந்ததென்று தெரியவருகிறது

துணைக்காவலுடன் சாமான் கப்பல்களை பத்திரமாகக் கொண்டு போய்விடலாமென்று உணர்ந்த ஜெர்மனி இப்பொழுது கப்பல்களின் குறைவைச் சரிப்படுத்த இ-படகுகள், சுரங்க வாரிக்கப்பல்கள், கவசம் பூண்ட இழுப்புப்படகுகள், உதவிக் கப்பல்களை சாமான்களுக்குத் துணையாக அனுப்பி அவைகளை கடற்கரை யோரமாக நடத்திச்செல்லுகின்றன.

இந்தத் துணைக்காவல் போதுமானதல்ல. சாமான்கப்பல்களுக்குத் துணைக்காவல் செல்லும் நாசகாரிகளுக்கும், போர்க்கப்பல்களுக்கும், யூ-படகுகளைத் தாக்கும் கப்பல்களுக்கும், தற்காப்பு செய்ய சஞ்சாரிகளும், யுத்தக்கப்பல்களும் தேவைப்படும். இன்று ஜெர்மனியின் கடல் மார்க்கங்கள் மோசமான நிலைமையிலிருக்கின்றன. ஜெர்மன் மீன்வெடிப் படகுகளை அழிக்க பிரிடிஷ், அமெரிக்க நாசகாரிகளும், ஜெர்மன் நாசகாரிகளையும், கடற்கரை பீரங்கிகளையும், நொறுக்க நாசகாரிகளும் நம்வசமிருக்கின்றன. பிரிடிஷ் யுத்தக்கப்பல்கள் குறிப்பாகவும், தீங்கிழைக்கக் கூடியவகையிலும் கடற்படை பீரங்கிகளை பிரயோகித்து எந்த சமுத்திரங்களிலும் நடமாடுமென்று ஜெர்மனிக்குத் தெரியாது.

ஜெர்மன் போர்ப்படைகளைத் தாக்கிவரும் நடவடிக்கையில் பிரிடிஷ் யுத்தக்கப்பல்களின் பீரங்கிப் பிரயோகத்தைக் கண்டுதான் ஜெர்மனி நடுங்குகிறது.

பார்மோஸாத் தீவின் பேரில் வெடிகுண்டுகள்.

(ஜோஸப் கால்மர்.)

சூபர் பறக்கும் கோட்டை விமானங்கள் ஜப்பானியர் வசமுள்ள பார்மோஸாத் தீவை ஆறு நாட்களுக்குள் ஐந்து தடவை தாக்கியிருக்கின்றன. அந்தத் தீவின் ராணுவ முக்கியத்வத்தை ஜோஸப் கால்மர் இந்தக் கட்டுரையில் விவரிக்கிறார்.

தெற்குப் பகுதியில் ஜப்பான் விஸ்தாரமடைந்ததற்கு பார்மோஸா தான் ஜப்பானுக்கு பாய்ச்சல் ஸ்தலமாக இருந்தது. 1868-ம் வருஷத்தில் ஜப்பான் நவீன முறையில் ஒரு தேசமாக மாறியதிலிருந்து, இந்தத் தீவு முக்கியத்துவமுள்ளதென்று அறிந்து, அதுமுதல் அதைக் கைப்பற்ற அது முயற்சிசெய்து வந்தது.

இந்தத்தீவு சைனாவின் பூகியன், குவாண்டங்க் மாகாணங்களின் கடற்கரைகளுக்கு எதிர்த்தாற்போல் கடல்தாண்டி இருக்கிறது. பூசௌ, சுமாய், சுவடொ, காண்டன் துறைமுகங்களின் போக்குவரத்துகள் அதன் கண்காணிப்புக்குட் பட்டவைகள். இந்த சந்நிவேசத்தினால்தான் 1874-ம் வருடத்திலேயே ஜப்பான் பார்மோஸாத்தீவில் படைகளை இறக்கிற்று. அத்தீவின் மத்தியில் 800 மீடர் உயரத்தில் ஜிப்ஸூ கெட்சுரான் என்ற ஏரி இருக்கிறது. அதில் உற்பத்தியாகும் மின்சார சக்தியைக்கொண்டு பார்மோஸாவில் அநேக யுத்த தளவாட உற்பத்தி சாலைகள் வேலைசெய்து வருகின்றன. அந்தத் தீவிலுள்ள ஒன்பது சர்க்கரை உற்பத்தி செய்யும் ஆலைகளை ஜப்பான் மூடிவிட்டு மின்சார சக்தியை யுத்தத் தொழிற்சாலைகளில் ஈடுபடுத்திற்று. பார்மோஸாவிலுள்ள சர்க்கரை ஆலைகள் மிகவும் சிலாக்கியமான நிலைமையை அடைந்து விட்டதால் அவைகள் ஜப்பானுக்குப் போதுமான சர்க்கரையை ஸப்ளை செய்து வந்தன. ஆகையால் அவைகளை நிறுத்தியபின் யுத்த தொழிற்சாலைகளுக்குப்போதுமான மின்சார சக்தி கிடைத்து விட்டது.

சீனர்கள் இத்தீவை தைவான் என்று சொல்லுகிறார்கள். பார்மோஸா அல்லது அழகியது என்று அதைப் போர்ச்சுகிய மாலுமிகள் அழைத்தார்கள். பெரிய வல்லரசுகளின் ஆக்ஷேபணையின் பேரில் ஜப்பான் அந்தத்தீவிலிருந்து வெளியேறி விட்டது.

ஒரு சமயத்தில் பிரஷ்யர்கள் அந்தத் தீவிலிறங்கினார்கள். 1869-ம் வருஷத்தில் பிரஷ்யக் கப்பலான எல்பேயிலிருந்து மாலுமிகள் தைவான் கடற்கரையிலிறங்கினார்கள். அங்கிருந்த ஜாதியார்கள் அவர்களைக் கடலுக்குள் துறத்தியடித்து விட்டார்கள். அதன் பின் எல்பெக் கப்பலின் காப்டன், அவனை நாஸிகளுக்கு மூதாதிரியர் என்று சொல்லலாம், மாரின் படைகளை இறக்கி சமீபத்திலிருந்த கிராமத்தை தரைமட்டமாக்கி, ஓடாமலிருந்த குடிகளையும் கொன்று விட்டான்.

1894-ம் வருஷத்தில் சைனாவுக்கும் ஜப்பானுக்கும் நவீன முறையில் முதல் முதலில் போர் மூண்டது. அந்த வருஷத்தில் ஜப்பானியர்கள் பெஸ்காடோர்ஸை ஆக்கிரமித்தார்கள். பார்மோஸா பிடிபடவில்லை. 1895-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 18-ம் தேதியன்று ஷிமோனோசெகியில் ஏற்பட்ட சமாதான உடன் படிக்கையின் பிரகாரம், சைனா பார்மோஸாவை ஜப்பானுக்குத் தானம் செய்தது. இரண்டு வருஷங்களுக்குப்பின் பார்மோஸாவைப் பாய்ச்சல் ஸ்தலமாக வைத்துக்கொண்டு தெற்குச் சைனாவையும் தெற்கு ஆசியா நாடுகளையும் ஜப்பான் பிடித்துக்கொண்டது. இது ஜப்பானின் சாம்ராஜ்ய அபிவிருத்தி நிகழ்ச்சியின் ஒரு

அம்சமாகும். பார்மோஸாவிற்குத் தெற்கில் விஸ்தாரம் செய்யும் சங்கத்தின் தலைவரான கிஷிஸாவா, 1897-ம் வருஷத்தில் தேசவிஸ்தாரத்துக்காக தைவான் பாங்கு ஒன்று ஸ்தாபிக்கப் பட்டதென்று 1941-ம் வருஷத்தில் ஒப்புக்கொண்டார். தைவானுக்கு ஜப்பானியர்கள் அளித்த பெயர் கவனுர்கமுள்ளது. அதை டொனுன்கி செகி என்று அழைத்தார்கள். அதாவது தெற்கை நோக்கி அடிக்கக்கூடிய கல் என்று அது பொருள்படும். தைவான் பாங்கின் கிளை ஸ்தாபனம் 1900-த்தில் அமாயிலும், 1903-ல் ஹாஸ்காங்கிலும், 1912-ல் தாயிலாந்திலுள்ள பாங்காங்கிலும் அமைக்கப்பட்டு விட்டன. தைவான் பாங்கின் மூலதனத்திலிருந்து வருஷா வருஷம் அனுப்பப்பட்ட 8-லக்ஷம் யென்கள்தான் மலேயா, டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள், ஆஸ்திரேலியா, இந்தோ-சைனு, தெற்குச் சைனு, தாய்லாந்து முதலிய இடங்களில் ஜப்பானின் ஐந்தாம்படையினராகவும், சாரணர்களாகவும் வேலை செய்த 3,000 ஒளிப்படமெடுப்பவர்கள், மருந்து வியாபாரிகள், வண்ணுன்கள், சில்லரை வியாபாரிகள், மீன் பிடிப்பவர்களின் செலவிற்குப் பொருளுதவி செய்தன.

1936-ம் வருஷத்தில் ஜப்பானின் குடியேற்ற நாட்டு மந்திரியான நாகாடா ஜனப்பிரதிநிதி சபையில் "தைவானின் பூகோள அமைப்பினுல் அது தெற்கில் விஸ்தாரம் செய்ய சரித்திர பூர்வமாக முக்கியத்துவமுள்ளது" என்று வெளியிட்டார். 1940-ம் வருஷத்தில் குடியேற்ற நாடுகளின் உத்தியோகஸ்தர்களுக்காக சர்வ கலாசாலை ஒன்று அந்தத் தீவில் அமைக்கப்பட்டது. தெற்கு ஆசியா தேசங்களில் ஜப்பானிய நிர்வாகிகளாகச் சென்றிருப்பவர்கள் அந்தப் பள்ளிக்கூடத்தில் பட்டம் பெற்றவர்கள். பிலிப்பைன்ஸை பார்மோஸாவிலிருந்து பாய்ந்துதான் தாக்கினுர்களென்பதை நாம் மறந்து விடக்கூடாது.

பழைய சாமான்களின் சேமிப்பும், யுத்த உற்பத்தியும்.

(காரோல் C. டெய்லர்.)

யுத்த ஆரம்பத்திலிருந்து பிரிடனிலுள்ள நாட்டு மக்களும், நகரத்தார்களும் 5½ லக்ஷம் டன்கள் பொறுமானமுள்ள பழைய சாமான்களைச் சேமித்து இருக்கிறுர்கள். அவைகள் யுத்த உற்பத்தி உபயோகப்படுத்தப்பட்டிருப்பதால் பிரிடிஷ் மக்கள் யுத்த முயற்சிக்குப் பேருதவி செய்திருக்கிறுர்கள்.

உதாரணமாக, பிரிடனின் உற்பத்திசெய்யப்பட்ட காகிதம் குப்பைக் காகிதத்திலிருந்து தயாரிக்கப்பட்டது. பிரிடிஷ் மக்கள் 14 லக்ஷம் டன்கள் எடைமானமுள்ள குப்பைக் காகிதத்தைச் சேமித்துக் கொடுத்தார்கள். இது மனதாரச் செய்யும் உதவியை வெளிப்படுத்துகிறது. இத்துடன் தொழிற்சாலைகளிலும், சகலவிதமான வியாபார ஸ்தலங்களிலும், சேவைப் படைகள் ஸ்தாபனங்களிலும், பழைய சாமான்கள் சேமிக்கப்பட்டன. இவைகளிலிருந்து யுத்த உற்பத்திக்கு அவ்விதம் செய்வதின் அவசியம் புலப்படுகிறது.

1939-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் ஸப்ளை இலாகா மந்திரி பழைய சாமான்களைச் சேமிப்பதற்காக ஒரு இலாகாவை ஸ்தாபித்தார். இந்த இலாகாதான் ஸால்வேஜ், மீட்சி டிரெக்டரேட்டாக மாறியது. உலோகத் தொழிற்சாலைகளிலுள்ள குப்பைகளைச் சேமிக்கும் பொறுப்பை தொழிலாளர் இலாகா ஏற்றுக்கொண்டது. தொழிற்சாலைகளிலுள்ள சாமான்களைச் சேமித்து அவைகளைத் தகுதியான இடங்களுக்கு அனுப்ப உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டார்கள். சிற்றுண்டி சாலைகளிலும், ஆபீஸ்களிலும், சாமான் கிட்டங்கிகளிலும், ஆஸ்பத்திரிகளிலும், அரசாங்க இலாகா ஆபீஸ்களிலும் பழைய சாமான்களைச் சேமிக்க ஆபீஸர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறுர்கள். பள்ளிக்கூடப் பிள்ளைகளும், சாரணர்களும் சாரணச்சிறுமிகளும் இந்த வேலையில் ஈடுபட்டிருக்கிறுர்கள்.

மேலே சொல்லிய புள்ளி விபரங்களிலிருந்து வெடிமருந்து உற்பத்தி செய்வதிலும், கப்பல்களின் தேவையைக் குறைப்பதிலும், ஒவ்வொரு குடும்பமும் எவ்வளவு செய்திருக்கிறதென்பது நன்கு விளங்கும். சேமித்து அனுப்பியிருக்கும் 5½ லக்ஷம் டன்கள்கொண்ட சாமான்கள் 5,000 டன்கள் ஏற்றிச் செல்லக்கூடிய 1,100 கப்பல்களில் செல்லும் சாமான்களுக்கு ஒப்பிடக்கூடியவை. ஒரு டன் காகிதத்திலிருந்து சுரங்கவெடிகளுக்கு உபயோகிக்கக்கூடிய 9,000 உறுப்புகளைச் செய்யக்கூடுமென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. பிரிடனில் மட்டும் 15 லக்ஷம் குப்பைக் காகிதம் சேமிக்கப்பட்டிருப்பதென்றுல் அதன் முக்யத்துவம் நன்கு விளங்கும்.

பிரிடனில் 1944-ம் வருஷம் ஏப்ரல் மாதம் முடிய 12 லக்ஷம் டன்கள் கழிபட்ட உலோகம் சேமிக்கப்பட்டது. தொழிலாளர் இலாகா 3,800,000 டன்கள் எடைமானமுள்ள உலோகத்தைச் சேமித்திருக்கிறது. யுத்த ஆரம்பத்திலிருந்து இதுவரையில் தினசரி சராசரி 1,10,000 ராத்தல் எடைமானமுள்ள கிழிந்த துணிகள் சேமிக்கப்பட்டிருக்கின்றன. அதில்

செம்பாதிகள் உரோமக் கந்தைகளென்றும், மறுபடி திருத்தியமைக்கும்பொழுது 10 சத விகிதம் அழிந்துவிடுமென்று வைத்துக்கொண்டாலும், அவைகளிலிருந்து 7,000 உருப்புகளும் 5,000 பெரிய மேலங்கிகளும், 20,000 சஜத் துணியும், இன்னும் அநேக சாமான்களும் தினசரி உற்பத்தி செய்துவிடலாம். யுத்தத்துக்குமுன் இங்கிலாந்து 3 லக்ஷம் அந்தர் உரோமக் கந்தைகளையும், 4 லக்ஷம் அந்தர் பருத்திக் கந்தைகளையும் இறக்குமதி செய்துவந்தது.

1939-ம் வருஷ நவம்பர் மாதம் முதல் 1944-ம் வருஷம் எப்ரல் மாதம் வரையில் 26,000 டன்கள் எடைமானமுள்ள ரப்பர் சேமிக்கப்பட்டது. மோட்டார் டயரின் 10 ராத்தல் எடைமானமுள்ள துணுக்கு ரப்பரிலிருந்து 5 ராத்தல் புதிய ரப்பர் உற்பத்திசெய்யலாம். 1,000 டன் ரப்பரிலிருந்து கனமான வெடி விமானங்களில் அமைக்கக்கூடிய 1,000 பெட்ரோல் டாங்கிகளும், 3,000 சர்ச்சில் டாங்கிகளுக்குரிய ரப்பர் முஸ்தீப்பும், கனமான வெடி விமானங்களுக்கு 1,000 டயர்களும், சண்டை விமானங்களுக்குரிய 2,000 பெட்ரோல் டாங்கிகளும், விமானங்களுக்குரிய 1,000 ரப்பர் சட்டைகளும், 5,000 மேவெஸ்ட் உள்சட்டைகளும் தயாரித்துவிடலாம்.

எலும்புகளையும் சமையலறைக் குப்பைகளையும் சேமித்து அதன் உபயோகமும் அதிகரித்தது. பிரிடிஷ் மக்கள் 9 லக்ஷம் பன்றிகளுக்குப் போதுமான 1 மிலியன் டன்கள் கொண்ட சமயலறைக் குப்பைகளைச் சேமித்திருக்கிறார்கள்.

கடைசியாக இப்பொழுது 300 தொழிற்சாலை நிலயங்கள் தள்ளுபடி சாமான்களைச் சேமிக்க அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுடன் 10,000 கம்பெனிகள் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றன. 43,665 பேர்கள் ஆபீஸில் வேலைசெய்துவருகிறார்கள். 1,32,543 பேர்கள் தெருக்களில் குப்பைகளைச் சேமித்து வருகிறார்கள்.

யுத்தத்துக்குப்பின் உலக சீர்திருத்தம்.

11. கிராமக் காடுகள்.

(மைகேல் ப்ரௌன்).

இந்தியாவின் எதிர்கால க்ஷேமத்தைக் கோரும் திட்டங்களில் ஜனங்களின் வாழ்க்கையில் மகத்தான மாறுதலை ஏற்படுத்தக்கூடிய திட்டம் சர்ச்சை செய்யப்படவில்லை. இந்த திட்டம் கலால் இலாகாவின் இன்ஸ்பெக்டர் ஜெனரலான ஹெர்பர்ட் ஹவார்ட் எழுதியுள்ள யுத்தத்துக்குப் பிந்திய இந்தியாவின் கலால் திட்டம் என்று தலையங்கமுள்ள புத்தகத்தில் அடங்கியுள்ளது,

சுருக்கமாகச் சொன்னால் ஸர் ஹெர்பட்டின் திட்டப்படி இந்தியாவின் கிராமங்களிலுள்ளவர்களுக்குப் போதுமான விறகைத் தயார் செய்யவேண்டும். அதன் மூலம் 69 மிலியன் டன்கள் எடைமானமுள்ள சாணி உரத்துக்கு உபயோகப்படலாம். அந்த உரத்தைக்கொண்டு 43,000 சதுர மைல்கள் அல்லது இந்தியாவின் சாகுபடி பூமியில் 13 சத விகிதத்துக்கு உரம் சப்ளை செய்யப்படலாம்.

இதைச் சாதிக்கவேண்டுமானால் தரிசு நிலங்கள், சாகுபடிக்கு லாயக்கில்லாதவைகள் என்ற 2,88,000 சதுர மைல்களில் 50,000 அல்லது 100,000 சதுர மைல்கள்கொண்ட பரப்பில் காடுகளை வளர்ச்சிக்கவேண்டும். இந்த புள்ளி விவரங்கள் அட்டவணைக்குரியவையென்றும் கிராமத்துக்குப் புறம்பானவையென்றும் சொல்லிவிடலாம். ஆனால் அவைகளின் தத்வம் அபாரமானது.

இந்தத் திட்டம் நிறைவேறினால் நல்ல உரமுள்ள வயல்களில் சிலாக்கியமான பயிர்கள் வளர்ச்சி பெறுவதுடன், குடித்தன ஸ்திரீகளுக்கும் வரட்டிதட்ட வேண்டியவேலை நின்றுவிடும். அவைகளை உபயோகிக்காமல் விறகை உபயோகித்து சமயல் செய்ய வேண்டிய அவசியமும் ஏற்பட்டுவிடும்.

கரித்தூள்.

எல்லா விதமான சமையலுக்கும் விறகு உபயோகமற்றது என்று அநேகர் ஆக்ஷேபிக்கலாம். கரியைத் தூளாக்கி அதை உருண்டைகளாகத் தயாரித்து உபயோகித்தால் அவைகள் வரட்டியைப்போல் உபயோகமுள்ளதாக இருக்குமென்று ஸர் ஹெர்பர்ட் ஹவார்ட் பதிலுரைக்கிறார்.

அதன் பிரயோஜனம் இத்துடன் நின்றுவிடாது. நல்ல உரமிடப்பட்ட நிலத்தின் அறுவடை இரட்டிப்பு மடங்காக இருக்கும். விவசாயிக்கு நல்ல லாபம் கிடைக்கும் அதற்காக அவன் அதிகச் செலவு செய்யவேண்டியதில்லை. விறகின் கிரயமும் அதிகமாக இராது.

கிராமக்காடுகள் என்று ஸர் ஜோகேந்திர ஸிங் சொல்லும் பொழுது புதிய காடுகளை நாடெங்கும் உற்பத்திசெய்யவேண்டுமென்றுதான் துவக்கிச் செல்லவேண்டும். விறகு, கட்டடம், ஆயுதங்கள் முதலியவற்றிற்குத் தேவையான மொரும்பும் குறைந்த விலையில் ஸப்ளை செய்யப்படவேண்டும். அதாவது அவைகளை வெகுதூரம் எடுத்துச்செல்லக்கூடா தென்று பொருள்படும். ஏனெனில் வண்டி வாடகை அதிகமாகயிருக்கும்.

ஒவ்வொரு கிராமத்திலும் காடுகளை வளர்ச்சி செய்வதென்றால் இந்தியாவின் காடுகளுள்ள படத்லைதத்திருத்தி வரையவேண்டும். உதாரணமாக ஒரு வட்டாரம் வங்காளத்தில் துவக்கி, பீகார், ஐக்கிய மாகாணங்கள், தெற்கு, மேற்கு பஞ்சாப், ராஜபுதனம், கத்தியவார், பம்பாய் வழியாகச்சென்று ஹைதராபாத்தில் முடிவடைகிறது. அங்கு காடுகளே கிடையாது. இந்த ஜனநெருக்கமுள்ள வட்டாரத்தில் அநேக சாகுபடி நிலங்களிருக்கின்றன. அங்குள்ள ஜனங்கள் வரட்டியை ஏராளமாக உபயோகித்து வருகிறார்கள். அதே மாதிரியாக வடமேற்கு எல்லைச்சரக மாகாணத்திலும், பலுசிஸ்தானத்திலும் ஸிந்துவிலும் விறகு குறைவாகத்தானிருந்து வருகிறது.

சுலபமாகப் பயிரிடக்கூடிய மரங்கள்.

சில மர வர்க்கங்கள் எந்த சீதோஷ்ண ஸ்திதியிலும் விருத்தியாகுமென்பதை எல்லோரும் அறிந்து கொள்ளவில்லை. கன்றுகளை உயிர்ப்பிக்கிறதில்தான் அதிக சிரமம் உண்டாகுகிறது. 10" குறைவான மழையுள்ள பிரதேசங்களில் மரங்கள் கன்றுகளாகயிருக்கும் பொழுது தண்ணீர் அவசியம் பாய்ச்சப்படவேண்டும். 10" மழை உள்ள இடங்களில் வரட்சையைத்தாங்கும் மரங்களை நீர்ப்பாசனமன்னியில் பயிர் செய்யலாம்.

வரட்சையான பிரதேசங்களில் மரங்களினால் ஜனங்களுக்கு மற்றொரு சௌகரியமும் உண்டு. ஒரு தேசத்தின் சீதோஷ்ண ஸ்திதியை உருவாக்குவதற்கு காடுகள் முக்கியமானவை என்பதை எல்லோரும் அறிவார்கள். இந்தியாவின் காட்டிலாகாவின் திட்டமும், சீதோஷ்ண ஸ்திதியையும், பிரதேச அமைப்பையும் நிலைநாட்டவும், வெள்ளப்பெருக்கையும், மண்ணரிப்பையும், சிதைவையும் தடுக்கவும் காடுகளைப் பரிபாலிக்கவேண்டுமென்பதுதான்.

வடமேற்கிலிருந்து கங்காநதி சமவெளி வரையில் பாலைவனத்தோற்றம் காணப்படுகிறது. இந்தத் தோற்றம் கிழக்கில் பரவிவிடுவதைத் தடுக்க இது வரையிலும் ஒருவித நடவடிக்கையும் கையாளப்படவில்லை. கிராமக்காடுகளை ஸ்தாபித்தால் இந்த பிரச்னை தீர்ந்து விடுமென்று ஸர் ஹெர்பர்ட் நம்புகிறார்.

மேய்ச்சல் பிரச்னை.

இந்த நடவடிக்கையிலும் சில சிரமங்களிருக்கின்றன. கால்நடைகளும், வெள்ளாடுகளும் தான் இந்த விஷயத்தில் இடையூறாகயிருக்கின்றன. கால்நடைகளுக்குச் சிறந்த மேய்ச்சல் பொருள் கிடைக்காமல் தடை செய்வதற்கு காட்டிலாகாதான் பொறுப்பாளி என்று குடியானவன் நினைக்கக்கூடும். உபரியாக 100,000 ஏக்கராக்களில் விறகுக்காக மரங்களைப் பயிரிட்டால் கால்நடைகளின் மேய்ச்சல் ஸ்தலங்கள் குறைவுபட்டுவிடும். மேலும் கன்றுகளுக்கும், வெள்ளாடுகளுக்கும் ஏழாம் பொருத்தம்தான்.

இது சம்பந்தமாக கிராமவாசியின் வாழ்க்கை முறையில் மற்றொரு மாறுதல் ஏற்படும். இந்நாட்டில் அலைந்து திரியும் உபயோகமற்ற ஏராளமான கால்நடைகளுக்கு பதிலாக குறைவான உபயோகமுள்ள கால்நடைகளை வைத்திருக்கவேண்டும். இது சாத்தியமற்ற காரியமில்லை.

மேலும் மேய்ச்சல் பொருளைக் கட்டுபாட்டில் வைத்து சில இடங்களில் கால்நடைகள் சஞ்சாரம் செய்யக்கூடாதென்றும் உத்தரவிட்டால் வைக்கோல் அதிகமாகக் கிடைக்கும். இதுதான் கால்நடைகளுக்குத் தேவை. உதாரணமாக ஐக்கிய மாகணங்களில் நிலங்களில் கால்நடைகள் மேய்ச்சலுக்கு விடப்பட்டபொழுது வருஷத்துக்கு ஒரு ஏக்கராவிலிருந்து $2\frac{1}{2}$ மணு வைக்கோல் கிடைத்ததென்றால் நிலத்தைக் கண்காணிப்பில் வைத்திருந்தபொழுது 17 மணு வைக்கோல் கிடைத்து விட்டது.

கிராமவாசிகளுக்கு இதைப் புகட்ட வெகுகாலம் பிடிக்கும். பொதுஜன மதிப்பைப் பெற உத்தேசிக்கிறவர்கள் கிராமவாசியின் கால்நடைகளின் மேய்ச்சல் உரிமைகளைக் குறைத்துவிடக்கூடாதென்று சொல்லி நமது திட்டங்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தக்கூடும். ஆனால் இந்த உரிமைகள் காலக்கிரமத்தில் கிராமத்தைப் பொட்டலாக்கி விடுமென்பதை அவர்கள் கூடிய சீக்கிரம் அறிந்து விடுவார்கள்.

தற்போதிருக்கும் நிலைமையில் இந்தியாவில் காடுகள் அதிகமாக கிடையாது. மேற்கு நாடுகளில் 20 அல்லது 25 சதவிகிதமுள்ள காடுகளுடன் ஒப்பிட்டால் இந்தியாவின் பரப்பில்

13 சதவிகிதம்தான் காடுகள் நிரம்பியுள்ளது. யுத்தத்துக்குப் பிந்திய திட்டத்தில் இந்தியாவின் காடுகளை 20 முதல் 25 சதவிகிதமாக அதிகரிக்கிறதென்று உத்தேசித்திருக்கிருர்கள்.

இந்த அபிவிருத்தியிலிருந்து இந்தியாவில் தேவைக்கு அதிகமான மொரும்பு கிடைத்து விடுமென்று பொருள்படாது. மொரும்பு முதிர்ச்சி பெருவதற்கு 50 முதல் 150 வருடங்கள் வரை செல்லவேண்டும். ஆனல் விறகுக்கும், ஆயுதங்களுக்கும், மற்ற தேவைகளுக்குமுரிய சிறிய மரங்கள் கிராமக்காடுகளில் 20 அல்லது அதற்கு குறைவான வருடங்களில் தேர்ச்சி பெற்றுவிடும். மேலும் மற்ற திட்டங்களின்படி நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் மொரும்பு ஸப்ளை அதிகமாக இருக்கவேண்டும். வாழ்கை முறையில் அபிவிருத்திவேண்டுமாஞல், பெரிய வீடுகள் ஏராளமாகக் கட்டப்படவேண்டும். வண்டிகளும், படகுகளும், கருவிகளும் அதிகரிக்கப்படவேண்டும். இந்த தேவையையும் நாம் பொருட்படுத்தவேண்டும்.

அகாலத்தில் மரத்தை வெட்டுவது.

யுத்த அவசியத்துக்காக மொரும்பை ஸப்ளைசெய்ய மரங்கள் ஏராளமாக வெட்டப்பட்டுவிட்டதால் இந்தியாவின் காடுகள் அழிந்து போய்விட்டனவென்று சில மாதங்களாகச் சொல்லப்பட்டுவருகிறது. இதை ஸர் ஹெர்பர்ட் ஒப்புக்கொள்வில்லை. 1944-ம் வருஷ முடிவில் மரங்கள் கால அட்டவணைக்கு $1\frac{1}{2}$ வருஷங்களுக்கு முன்னதாகத்தான் வெட்டப்பட்டன. மற்ற தேசங்களில் காடுகளுக்கு ஏற்பட்ட அழிவுடன் ஒப்பிட்டால் இந்தியாவின் காடுகள் ஒரு சிறிதுதான் அழிப்பட்டிருக்கின்றன என்று அவர் அபிப்பிராயப்படுகிருர்.

சில இடங்களில் தேவை அதிகமாகயிருந்தது. பம்பாயிஉள்ள தேக்கு மரக்காடுகளில் மரங்கள் 10 வருடங்கள் முன்னதாகவே வெட்டப்பட்டுவிட்டன.

இதிலிருந்து யுத்தத்துக்குப்பின் மரங்களையே வெட்டக்கூடாதென்பது கிடையாது. யுத்த அவசியத்திஞல் காடுகள் அழிக்கப்பட்டுவிட்டன என்று சொல்லப்படுவதை ஒப்புக்கொள்ளவேண்டியதுதான். யுத்தத்துக்குமுன் மரங்கள் வெட்டப்பட்ட அளவை யுத்தத்துக்குப்பின் 20 வருஷங்கள் வரையில் குறைத்துக்கொண்டால் இந்தியாவின் காடுகளின் நிலைமை பழைய நிலைமைக்கு வந்துவிடுமென்று ஸர் ஹெர்பர்ட் ஹவார்ட் நம்புகிருர். அதற்குள்ளாக 1870-ம் வருஷத்தில் பயிரிடப்பட்ட மரங்கள் முதிர்ச்சிபெற்றுவிடும்.

இவ்விதமாக சரியான முறையில் பராமரிசை செய்துவந்தால் இந்தியாவில் மொரும்புப் பஞ்சம் உண்டாகுவதற்கு முகாந்திரமே கிடையாது. இதற்காக காட்டு இலாகா சம்பந்தமாக திட்டம் போடுகிறவர்கள புதிய நிலைமைக்கு ஒத்தவாறு திட்டங்களை நிறுவுவதுதான் மெத்த அவசியமாகும்.

நான் ஏற்கனவே சொன்னபிரகாரம் ஒவ்வொரு கிராமவாசிகளும் தேவையான விறகை ஸப்ளை செய்வதுதான் முக்கியமான ஏற்பாடாகும். சில கிராமங்கள் முக்கியமாக மத்திய மாகாணங்களும், மதராஸ் மாகாணமும் இது விஷயத்தில் மேன்மையாக இருக்கின்றன.

அதிக மேய்ச்சல் பொருள்.

ஸர் ஹெர்பர்ட் ஹவார்ட் பின்வருமாறு சொல்லுகிருர்:—

"சாதாரண கிராம வாசிக்கு வழங்கப்படும் காட்டுப் பொருள்களில் மேய்ச்சலுக்குரிய பொருள்களும் ஸப்ளை செய்யப்படவேண்டும். விவசாயியின் தேவையான ஸப்ளை செய்யக்கூடிய சிறிய காடுகளில் குறுகிய காலமுள்ள சிறிய மரங்களை உற்பத்தி செய்யவேண்டும். இந்த மரங்கள் 15 அல்லது 20 வருடங்களில் வெட்டப்படவேண்டும். 5 அல்லது 10 வருடங்கள் வரையில் அவைகள் மேய்ச்சலுக்கு விடப்படவேண்டும். அவைகள் விறகையும், மொரும்பையும் ஸப்ளை செய்துவரும்.

"காடுகள் வளர்ச்சிப்பெற்றபின் மேய்ச்சல் நின்றுபோய்விடும். அவ்விதமாக இருப்பது கடைசி சில வருஷங்களில்தான் ஆகையால் செம்பாதியோ அல்லது மூன்றில் ஒருபாகமோ மேய்ச்சலுக்கு லாயக்குள்ளதாக இருக்கும். சரியான முறையில் பராமரிஷை செய்துவந்தால் அவைகள் அதிக பலனையும் தரும். மேய்ச்சலுக்கு உபயோகப்படும் காலங்களில் கால்நடைகள் காலாரச்சென்றும் திரும்பிவரலாம். ஆகையால் சிறுபான்மையுள்ள மரங்களை வளர்ச்சி செய்வதிஞல் மேய்ச்சல் பொருள்களின் உற்பத்தி அதிகமாகுமேயொழிய குறைவுபடாது."

கிராம வாழ்க்கையை விருத்திசெய்யக்கூடிய இந்த திட்டம் பத்திரிகைகளில் தலையங்கத்துடன் ஏன் ஆதரிக்கப்படவில்லை என்பதற்குக் காரணத்தை சுலபமாகச் சொல்லமுடியாது. அதை நிறைவேற்றுவதற்கு நூறு கோடிக்கணக்கான ரூபாய்கள் தேவையில்லை. ஆகிலும் இந்த திட்டம் கிராமத்தார்களின் வாழ்க்கையை அபிவிருத்திசெய்யக்கூடும்.

யுத்தப் பாடல்.

ஹிட்லர் முஸோலினி வீழ்ச்சி.

(*By Mr. P. Maria Michael Pillai, Head Teacher, S. S. Killukottai.*)

(ஐயா சிறுபெண் என்ற சந்த மகுடம்).

வேடிக்கையிது ஹிட்லர் வாழ்வு வியூர்த்தமாய் போச்சு—அவன்
விரைவில் கட்டிய, மனக்கோட்டைகளுக் கனர்த்தமேயாச்சு
ஞாயம்—ஜெயித்திடலாச்சு

(1) கோடிக்கணக்காய் வீரரோடு குதித்தெழுந்தானே—அவன்
கொண்ட எண்ணம் பூர்த்தியென்று மதித்திருந்தானே—நல்ல
ஜோடியென்று முஸோலினியுடன் சுகித்திருந்தானே—பக்கத்
துணைக்கு ஜப்பான் உதவியென்று நினைத்திருந்தானே—சட்டம்
விதித்திருந்தானே—கொட்டம்—அடித்திருந்தானே
மிக்க மிக்க— (வேடிக்கை).

(2) கண்டோர் நடுங்க அண்டங்குலுங்கிட பேய்க்கூட்டம் போலே—கொடுங்
காலாட்கள் படை வெடிவிமானம் டாங்கிகளாலே—பெருஞ்
சண்டாளனவன் பக்கத்திருந்த நாடுகள் மேலே—மிக
தடதடவெனப் புகுந்து வெற்றி யடைந்ததினாலே—மேலும்
தொடர்ந்ததினாலே—கொண்டான்
அகந்தை மென்மேலே—சொல்லச் சொல்ல (வேடிக்கை).

(3) போலந்து ஹங்கேரி ஸெகோஸ்லவேக்யாவை பிடித்துக் கொண்டானே—டச்சு
பெல்ஜியம் ஹாலந்து நார்வே பிரான்ஸையும் எடுத்துக்கொண்டானே—அவன்
மேலும் பல்கேரியா யூகோ ருமேனியை வளைத்துக்கொண்டானே—மிக
விரைவில் பால்கன் நாடுகளை வசப்படுத்திக்கொண்டானே—கிரீஸை
எதிர்த்து வென்றானே—பலபேரை
வதைத்துக் கொன்றானே—காணக்காண (வேடிக்கை).

(4) நாஸிக்கு எமனாக ரஷ்யா முளைத்தது பாரும்—அவன்
நடு நடுங்கிட துரத்தி விரட்டி யடித்ததைக்கேளும்—நம்
நேசக் கட்சியோடாங்கில சேனையும் நெருக்கியதாலும்—அவன்
நிலைத்துப் போரை நடத்திட வழி யாதுண்டுகூறும்—துன்பம்
வந்துதான் தீரும்—உலகோர்
மனமது தேறும்—பேஷான (வேடிக்கை).

(5) அதிபதியாய் வாழ்ந்த முஸோலினி என்பானே—அவன்
ஆகாத குணம் படைத்த ஹிட்லர் சேர்க்கையால் தானே—தன்
மதியிழந்து நிதியிழந்து மான மழிந்தானே—அவன்
வைத்துப் படைத்த நாடுகளை யடியோடிழந்தானே—கெடு
வானவன் தானே—கேடு
தான் நினைந்தானே—நல்ல நல்ல (வேடிக்கை).

(6) அடாது செய்தவன் படாதபாடு படுவதே நீதி—இதை
அறிந்து தானோ ஜெர்மன் சேனையில் வந்ததே பீதி—நாளும்
விடாது காலைச் சுற்றிய பாம்பு கடிக்கும் நீ சோதி—அவன்
விதைத்த வினைகள் அறுத்திடாமல் இருக்குமோ மீதி—அடியேன்
கூறுமிச்சேதி—எங்கு
மே பிரக்யாதி—ஆமாமா (வேடிக்கை).

'வி' டயரி-1945.

(குறிப்பு புஸ்தகம்).

லினன் ரூ. 1—8—0 ; ஷீப்ஸ்கின் ரூ. 1—12—0 ; மொராக்கோ ரூ. 2—4—0.

தபால் செலவு (பிரத்தியேகம்):—ரிஜிஸ்தர் புக் போஸ்ட்டில் முதல் காபிக்கு ரூ. 0—4—3

அத்துடன் சேர்த்து அனுப்பும் ஒவ்வொரு காபிக்கும் ஒவ்வொரு அணா.

காபிகளுக்கு முந்துங்கள் !

15—11—44 முதல் ஸ்டேட் அச்சாபீஸில் விற்பனைக்குக் கிடைக்கும்

கீழ்க் கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம் :—

காரியதரிசி,
தேசிய யுத்த முன்னணி நிலயம்,
புதுக்கோட்டை (தென் இந்தியா).

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் 221. (1-வது பிரிவு).

28-10-44	முனிஸிபல் ஆபீஸ்	... மாலை	7.00
29-10-44	கீரனூர்	... ,,	7.00
,,	நாஞ்சூர்	... ,,	7.30
30-10-44	குடுமியாமலை	... ,,	7.00
,,	பரம்பூர்	... ,,	7.30
31-10-44	பெருங்களூர்	... ,,	7.00
,,	ஆதனக்கோட்டை	... ,,	7.30
1-11-44	காலேஜ் A இங்கிலீஷ்	... காலை	11.00
,,	காலேஜ் B தமிழ்	... ,,	11.00
1-11-44	C. S. M. பள்ளிக்கூடம்	... காலை	10.00
,,	ராணி பெண் பாடசாலை	... ,,	10.45
,,	பூங்குடி	... ,,	7.00
,,	சத்தியமங்கலம்	... ,,	7.30
2-11-44	மிரட்டுநிலை	... ,,	7.00
,,	அரிமளம்	... ,,	7.30
3-11-44	உடையாளிப்பட்டி	... ,,	7.00
,,	கிள்ளுகோட்டை	... ,,	7.30

பிரஸங்கம் 222. (2-வது பிரிவு).

4-11-44	முனிஸிபல் ஆபீஸ்	... மாலை	6.00
5-11-44	பூவரசகுடி	... ,,	7.00
,,	வேங்கடக்குளம்	... ,,	7.30
6-11-44	வெங்களூர்	... ,,	7.00
,,	கோனாபட்டு	... ,,	7.30
7-11-44	பனையப்பட்டி	... ,,	7.00
,,	ராங்கியம்	... ,,	7.30
8-11-44	காலேஜ் A இங்கிலீஷ்	... காலை	11.00
,,	காலேஜ் B தமிழ்	... ,,	11.00
8-11-44	C. S. M. பள்ளிக்கூடம்	... காலை	10.00
,,	ராணி பெண் பாடசாலை	... ,,	10.45
,,	குழிபிறை	... மாலை	7.00
,,	செவலூர்	... ,,	7.30
9-11-44	கொடும்பாளூர்	... ,,	7.00
,,	விராலூர்	... ,,	7.30
10-11-44	நச்சாந்துபட்டி	... ,,	7.00
,,	விராச்சிலை	... ,,	7.30

யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

28—10—44	திருமெய்யம்.
29—10—44	விராச்சிலை.
31—10—44	கோனாபட்டு.
2—11—44	கிழாநிலை.
3—11—44	புதுக்கோட்டை.
4—11—44	வெட்டம்விடுதி.
5—11—44	ஏம்பல்.
7—11—44	பேராம்பூர்.
9—11—44	ஆலங்குடி.
10—11—44	புதுக்கோட்டை.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—1-11-44.